928

KHADAR MALAR. MARCH. 1951

கதர் மலர்

மலர் 4. இதழ் 6.

தமிழ் நாட்டு சர்க்கா சங்கம், வெளியிடும் மாதாந்திர பத்திரிகை.

928 / 131.
பழ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1951
MADRAS

ராஜ்கோட் காந்தி சித்திராலய அனுமதியுடன்

A. I. S. A. கதர் மலர் & சர்வோதய பிரசுராலயம்,
வீரபாண்டி, திருப்பூர்.

விலை அணா 4. மார்ச் 1951. வருட சந்தா ரூ. 3.

மகாத்மா காந்தியின் கடிதங்கள்.	
1) மகன்லால் காந்திக்கு எழுதியது	169
2) ராமதாஸ் காந்திக்கு ,,	171
உழைப்பு மயமான வாழ்க்கை	173
ஸர்வோதய குறிப்புகள்	175
தேனீக்களின் மகத்துவம்	178
வாக்கின் மகிமை	180
மகாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் 4	181
ராட்டை தரும் புது யுகச் செய்தி	184
மீண்டும் சென்னை சர்க்காரும் சர்க்கா சங்கமும்	185
வாலிபர்களுக்கு அழைப்பு	193
தமிழ் நாட்டில் சர்வோதய மேளா	195
ஸர்வோதய கிராம யாத்திரை	197
தமிழ் நாட்டில் ஸர்வோதய தினம்	199
ஸர்வோதய-நூற்பு யக்ஞம்	201
குறிப்பும் செய்தியும்	204
கேள்வியும் பதிலும்	...
கதாயி மண்டல்	...

சுய தேவைக்கு தகுந்த சமயம்.

இப்பொழுது தேசத்திலுள்ள நிலைமையை அறிந்து ஆழ்ந்த யோசனையிலும் சர்க்கா சங்க அக்கிராசனர் ஸ்ரீ தீரேந்திர மஜும்தார், காரியதரிசி ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்திக்கு சமீபத்தில் எழுதிய கடிதத்தை கீழே பிரசுரிக்கிறோம்,

“தேசத்தில் நாளுக்கு நாள் நூல், துணி இவைகளுக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டு நிலைமை சீர்கேடடைந்து வருகிறது. அதனால் கதருக்கு இயற்கையாகவே கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கதரின் உற்பத்தி விற்பனையை அதிகரிக்கவே தொண்டர்களின் நோக்கம் செல்லும். ஆனால் இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் தொண்டர்கள் ஆடை சுயதேவைப் பூர்த்தி வேலையில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். எப்பொழுது நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாடும், ஜனங்களுக்கு துணி கிடைப்பதில் கஷ்டமும் ஏற்படுகிறதோ அந்த சமயமே நம்முடைய உற்பத்திக் கிளைகளை ஆடை சுயதேவைப் பூர்த்திக் கிளைகளாக மாற்றுவதற்கு ஏற்றதாகும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தங்களுக்கு வேண்டிய துணிகளை தாங்களே தயாரித்துக்கொள்ள வேண்டும் என்ற விஷயத்தை மக்களுக்கு புரியவைக்க முடியும். நாம் ஏற்கனவே தீர்மானித்தபடி நூற்போர்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளை நெய்து கொண்டபிறகு மிகுதியாக இருப்பதை நாம் வாங்கிக் கொள்வோம் என்ற வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தவேண்டும். இப்படிப்பட்ட சமயத்தில் நாம் நம்முடைய கிளைகளை கதர் சுயதேவைப் பூர்த்தி வஸ்திராலயங்களாக மாற்றிவிட்டால் பின்னர் நமது வேலையை சுலபமாக்கிவிடும்.

இவ்வருடம் மார்ச்சு, எப்ரல் மாதங்களில் தேசத்தில் துணித் தட்டுப்பாடு தோன்ற ஆரம்பிக்கும். நாம் சொல்லிவருவது போல் இந்நிலை 1952-ம் வருஷம் வரை மிக மோசமான நிலையையடையும். எனவே நாம் சுயதேவைப் பூர்த்தி வேலை தீவிரமாக ஆரம்பிக்க வேண்டும்.

நீங்கள் தற்பொழுது அங்கேயே இருப்பதினால் இந்த வேலையில் என்னென்ன முறைகள் சீக்கிரமாக செய்யப்பட முடியும் என்பதை ஆராய்ந்து எவ்வளவு முடியுமோ அவைகளை செய்விக்க வேண்டும். நம்முடைய தொண்டர்களிடையே சிறிது தூரதிருஷ்டி வேண்டும். நம்முடைய ஸ்தாபனங்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு முன்னேறாமல் பின்தங்கி விடுகின்றன. நாம் சூழ் நிலையை எதிர்பார்த்து முன்னேற வேண்டும்.”

காந்தி ஆசிரமம்,
கிராம சேவா வித்யாலயம்
சேவாபுரி, காசி. 30—1—'51.

தீரேந்திர மஜும்தார்.

கதர் மலர்



மலர் 4 | மார்ச் 1951. | இதழ் 6

மகாத்மா காந்தியின் கடிதங்கள்.

புது வருஷ வாழ்த்து.

ஸ்ரீ மகன்லால் காந்திக்கு எழுதிய கடிதம்.

இந்த மங்கள தினத்தில் நான் உனக்கு எதைக்கொடுக்கட்டும். உன்னிடமும் என்னிடமும் இன்னும் பலரிடமும் இல்லாதது எதுவோ அதையே கொடுக்க முயற்சி செய்கிறேன். அந்தப் பொருள் கிடைத்துவிடும்பொழுது எல்லாம் கிடைத்துவிட்டதாகக் கொள்ளலாம். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்ற பழமொழிப்படி என்னால்தான் என்னகொடுக்க முடியும்? ஆனால் நாம் அனைவரும் சேர்ந்து ஆண்டவனிடம் கொடுக்கும்படி வேண்டுவோம்.

“நான் மானிடர், தேவர் ஆகியோரின் பாஷை பேசினாலும் என்னிடம் அன்பில்லையானால் என் பேச்சு பறையின் முழக்கத்தையும் ஜாலரின் த்வனியையும் ஒக்கும். எனக்கு வரப்போவது என்னவென்று தெரிந்திருந்து எல்லா விஷயங்களிலும் எனக்குப் பயிற்சி இருந்தபோதிலும் என்னால் மலையையே புரட்டி வைக்க முடிந்தபோதிலும் என்னிடம் அன்பில்லையானால் நான் சிறு துரும்பை ஒத்தவனே. என்னிடமுள்ள தானியங்களையெல்லாம் ஏழை எளியோருக்கு தானம் கொடுத்துவிட்டு என் உடலையே எரித்துக்கொண்டபோதிலும் என்னுள் அன்பில்லையேல் என் இச்செயல்களினால் பயனென்றும் விளையாது.”

“அன்பு எல்லாவற்றையும் சகிக்கும் தன்மையது. அன்புள்ள இடத்தில் தயை உண்டு. அன்பில் துவேஷத்திற்கு இடமில்லை. அன்பில் அகங்காரம் புகாது. அன்பில் ஆணவம் இல்லை. அன்பில் தகுதியின்மையில்லை. அன்பு சுயநலமுள்ளதல்ல. அன்பு விரைவில் ஆத்திரம் உறாது. அன்பில் தீய எண்ணங்கள் புகுவதில்லை. அன்பு அநியாயத்தைக் கண்டு ஆர்ப்பரிக்காது. அன்பு சத்தியத்தைக்கண்டு மகிழும். அன்பு எல்லாவற்றையும் பொறுக்கும். அன்பு எல்லாவற்றையும் ஒப்பும். அன்பு நன்மையில்

நம்பிக்கை கொண்டது. எல்லாவற்றையும் ஏற்பது அதன் இயற்கை. அன்புக்குத் தோல்வியென்பதே தெரியாது. ஆனால் நடக்குமென்று சொன்னது நடைபெறாமல் போகும். பேசிக்கொண்டிருந்த தொண்டை அடைபடும். தெரிந்திருந்த விஷயங்கள் மறந்து போம்."

"நான் குழந்தையாயிருந்தபொழுது குழந்தையைப்போல் பேசி வந்தேன். குழந்தைக்கிருந்த அறிவே எனக்கிருந்தது. குழந்தையைப்போலவே என் எண்ணங்கள் இருந்தன. பெரியவனானதும் நான் பிள்ளை பிராயத்தை விட்டுவிட்டேன். இப்பொழுதோ இடையில் திரை தொங்குவதால் நம்மால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. பிறகோ நாம் ஒருவரையொருவர் எதிரில் நின்று பார்க்க இயலும். இப்பொழுதோ எனக்குச்சிறிது அறிவு ஏற்பட்டிருக்கிறது. பிறகோ என்னை பிறர் உணரும் முறையில் நான் உணர்வேன். இறுதியில் சிரத்தை, நம்பிக்கை, அன்பு என்ற இந்த மூன்றுமே அழியாதிருப்பவை. அவற்றிலும் அன்பே தலைசிறந்தது."

இதைப்படி, இதைக்குறித்துச் சிந்தனை செய், மீண்டும்படி, இதை ஆங்கில மூலத்தில் (பைபிளில்) படித்து பிறகு ஹிந்தியில் மொழிபெயர்த்து வைத்துக்கொள். சிறிது நேரமாயினும் இதிலேயே சிந்தனையைச் செலுத்தி அன்பை கண்ணாரக்கண்டுகொள். மீராவை அன்பு பற்றியிருந்ததால் அவளுக்கு அன்பின் அனுபவம் பூர்ணமாக ஏற்பட்டிருந்தது. அவளுக்கிருந்த அதிர்ஷ்டம் நமக்கும் ஏற்பட்டு அவள் நுகர்ந்த அன்பை நுகரும் சக்தி நமக்கும் கிட்டுமானால் நாம் உலகையே குலுக்கிவிடமுடியும். ஆனால் என்னிடம் இது இருந்தும்கூட நான் ஒவ்வொரு கணமும் என் கை வெறும் கையாக இருப்பதையே உணருகிறேன். என் குறைபாட்டிற்கு ஒரு அளவேயில்லை. சில சமயங்களில் நான் குறைக் குடமாயிருப்பதை உணர்கிறேன். நேற்று என்னை அன்புடன் தடுத்தார்களே, அவர்களுக்கென செலவழிக்க என்னிடம் நேரமில்லை. இதனால் என் மனம் வெதும்பி வாடிற்று. இதை அன்பின் அறிகுறி என்று சொல்வதற்கில்லை. இதை குறைக்குடம் ததும்பியது என்றே சொல்லவேண்டும்."

புதிய வருஷம் உனக்கு நன்மை தருவதாக. உன் உடல் வலிவும், மனோ பலமும், ஆத்மீக சக்தியும் நாளுக்குநாள் வளர்ச்சிபெற்று அன்புடன் அவைகள் அனைத்தையும் பாரத மாதாவின் சரணங்களில் அர்ப்பணம் செய்யவேண்டும் என்பதே என் ஆசையும், ஆசியும் ஆகும்.

புத்தாண்டு.
ஸம்வத் 1974. **பாபுவின் ஆசிகள்.**
மோதிஹாரி. (பீஹார்.)

(ஹரிஜன ஸேவக் - 11—11—'50)

★

தமிழ்நாடு ... சென்னை-600 008
127776
J.L 1148K ...

ராமதாஸ் காந்திக்கு எழுதிய கடிதங்கள்

(14)

(தேதியில்லை)

நான் இந்தக்கடிதத்தை பௌண்டன் பேனாவினால் எழுதியிருப்பதை நீ கவனிப்பாய். முன்னொரு சமயம் மஹாதேவ் (தேசாய்) எனக்குப் பென்சிலால் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதை நான் படிப்பது சிரமமாகிவிட்டது. அது முதல் நான் மனதிற்கு முற்றிலும் பிடிக்காதிருந்த போதிலும் பௌண்டன் பேனாவையே உபயோகித்துவருகிறேன். இறகு பேனாவைக் கொண்டு எழுதுவதென்றால் எனக்கு மிக மிகப் பிடிக்கும். ஆனால் அதற்கு இப்பொழுது ஆவதைப் போல் இரு மடங்கு நேரம் செலவாகும்.

(15)

சபர்மதி 2—6—1919.

உனக்கு ஒரு விஷயம் தெரியாதென்றால் தெரிந்தவர்களிடம் அதை கேட்கத் தயங்காதே. காரணமில்லாத வெட்கத்தினால் உன் அறியாமையை மறைத்துக் கொள்ளாதே. நான் முதலில் தென்னாப்பிரிக்காவுக்கு போனபொழுது எனக்கு பி. நோட்டு என்றால் என்னவென்று தெரியாது. நான் இரண்டு நாட்கள் வரையிலும் என் அறியாமையை வெளிக் காட்டாமலிருந்தேன். அதனால் என் சங்கடங்களே அதிகமாயின. பி. நோட் என்றால் என்னவென்று தெரியாத வரையில் எனக்கு தாதா அப்துல்லாவின் வழக்கின் விஷயமாக ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஆகவே நான் என் அறியாமையை உடனே வெளியிட்டேன். பி. நோட் என்றால் 'பிராமிஸரி நோட்' என்று சொல்லக் கேட்கவே எனக்கு என் அறியாமையைக் குறித்துச் சிரிப்பு வரவில்லை. நான் சிரித்தது இதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் வீணில் வெட்கப்பட்டதைக் குறித்தே. ஏனெனில் பி. நோட் என்பதற்கு எனக்கு அகராதியில் தேடினாலும் அர்த்தம் கிடைத்திராது. ஆகையால் உனக்குத் தெரியாத விஷயம் எதையுப் பற்றி உடனே திறந்து கேட்பதே சிறந்த வழி. கேட்பதனால் பிறர் உன்னை முட்டாளென்று எண்ணிக் கொண்டால் எண்ணிக் கொள்ளட்டும். ஆனால் அறியாமை காரணமாக நீ பிழை புரியும் ஆபத்தில் மட்டும் சிக்காதே.

நீ தினமும் தவறாமல் ஏதேனும் வாசித்துக் கொண்டு வருகிறாயல்லவா? படுக்கையிலிருந்து எழுந்ததும் பிரார்த்தனை செய்து வருகிறாயா? செய்வதில்லையென்றால் செய்வதன் அவசியத்தை நான் உனக்கு நினைவுறுத்த விரும்புகிறேன். ஏனெனில் பிரார்த்தனை நமக்குச் செய்யும் நன்மை அளவிலடங்காதது என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. அதன் மதிப்பை நீ உனக்குக் கஷ்டம் நேரும் காலங்களிலும் நீ அதை முழு மனதுடன் செய்து வருவாயானால் ஒவ்வொரு நாளும் உணர்வாய். பிரார்த்தனை ஆத்மாவின் உணவாகும். உணவின்மையால் உடல் வாடி வதங்குவதைப்போல் தகுந்த உணவின்மையால் ஆன்மாவும் வற்றி வதங்கிப் போகும்.

(16)

தேதியில்லை.

..............சரியாக நடந்து கொள்ளவில்லையென்று கண்டால் எனக்கு எழுது, நீ தொந்தரவுப்படாதே. ஒரு விஷயம் எவ்வளவு முக்கியமான

தாயினும் நம்மை அது எவ்வளவுதான் அதிகமாக பாதிப்பதாயிருந்த போதிலும் நமக்கென அது ஒதுக்கப் படாத பொழுது நாம் அதைப் பற்றி கவலைப் படக்கூடாது. இதுவே பொதுவாக எல்லா மதங்களுடையதும் முக்கியமாக கீதையினுடையதுமான போதனை யாகும். நாம் எதையும் சொந்த விஷய மென்று கருதாதிருக்கவோ, எல்லா வற்றையுமே சொந்த விஷயமென்று கருதவோ, நமக்கென ஒதுக்கப்பட்ட ஒன்றே தன் சொந்த விஷயமென்று கருதி அதிலேயே ஆழ்ந்திருக்கவோ பயிலவேண்டும். தந்தை யொருவர் மகனிடமிருந்து தொலைவில் இருப்பா ரானல் மகன் அவருடைய உடம்பு எப்படி இருக்கிறதோ என்னவோ என்று கவலைப்படாமல் கடவுள் அவரை கவனித்துக் கொள்வதோடு தம் திரு வுள்ளப்படி அவரை உபயோகித்துக் கொள்வாரென்றும் நம்பியிருக்க வேண்டும். இதே விதி மகன் தந்தை யின் அருகாமையிலேயே இருந்து தந்தைக்குப் பணிவிடை புரியும் வேலை வேருெருவருக்கு அளிக்கப்பட்டு தனக்கு வேருெரு வேலை அளிக்கப் பட்டிருக்குமாயினும் பொருந்தக்கூடிய தே. தந்தையின் விஷயத்தில் சொல்லப் பட்டதெதுவோ அதுவேதான் சகோ தரன், சகோதரி, மனைவி, மகன் ஆகிய அனைவரின் விஷயத்திலும். நீ ஆசிரமத் திலிருப்பது ஒரு ஊழியனவதற்கு வேண்டிய பயிற்சி பெறவும், ஆசிரமத் தின் சூழ்நிலையிலிருந்து பெறக்கூடிய நன்மைகளைப் பெறவுமே. அங்கிருக்கும் பொழுது நீ எத்தனையோ விஷயங்களைப் பார்ப்பாய், எத்தனையோ செய்திகள் உன் காதில் விழும். அப்படியானல் அவைகளை நீ அவ்வவற்றிற்கு பொறுப் பானவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு உன் கடமை முடிந்து விட்டதாகிறது. மன அமைதியோடு ஒரு சமூகத்தில் வாழ வேண்டுமானல் அதற்கு இது ஒன்றே வழி. இதை விட்டு நாம் ஒவ்வொருவர் செய்வதின் நியாய அநியாயங்களை ஆராய்ந்து தீர்ப்புக் கூறப் புகுவோமானல் நாம் அழிந்தோம்.

(17)

எர்வாடா மந்திர் 28—11—1930.

குழந்தையின் ஜலதோஷத்திற்கு அதை வெயிலில் காயவை. இது சூடாக ஒத்தடம் கொடுப்பதற்குச் சமமாகும். இதனல் தோல் கெட்டிப்பட ஜலதோஷ மும் நீங்கும்.

உனக்கு உன் பண வரவு செலவு களைப்பற்றி சரியாகவும் பூர்ணமாகவும் கணக்கெழுதிவரும் பழக்கம் எற்பட்டு விடுமானல் அது உனக்கு பாரமாகவே தோன்ருது. இதற்கு மாருக உனக்கு அனுபவம் ஏற்பட ஏற்பட இதன் உப யோகம் தெரிய வரும். அமைதியான வாழ்க்கையோ, அவ்வளவு அமைதி இல் லாத வாழ்க்கையோ நடத்துவதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. எத்தகைய குழப்பம் மிக்க சூழ் நிலையில் இருந்து வந்த போதிலும் சில விஷயங்களை அமைதியாயிருந்து செய்யும் பழக்கத்தைப் பெறுவதற்கு நாம் விடாது முயற்சி செய்து வரவேண்டும்.

—(ஹரிஜன்—9—12—'50)

★

உழைப்பு மயமான வாழ்க்கை.

(ஆசார்ய வினேபா பாவே)

சென்ற அக்டோபர் 8-ந் தேதி அதாவது சர்க்கா துவாதசி பகல் 11 மணியிலிருந்து ஸ்ரீ வினேபாஜி 3 நாள் உபவாச விரதம் ஏற்று 11-ம் தேதி அதே சமயத்தில் சிறிது மோர் அருந்தி உபவாசத்தை நிறுத்தினர். கடந்த பல மாதங்களாக வினேபாஜி வயலில் உழைத்து வேலை செய்து வருகிறர். அவர் படும் சிரமத்தைக் கண்ட நண்பர்களும், பக்தர்களும் அவருடைய உடம்பு கெடாதிருக்க வேண்டுமே என்று அஞ்சிக் கொண்டிருந்தார்கள். எவ்வளவோ சொல்லியும் அவர் வேலைத்திட்டம் மாறுவதாயில்லை. ஆனல் கடைசியில் அவர் வேலை செய்து வந்த நேரம் அன்பர்களின் வற்புறுத்தலின் பயனகச் சிறிது குறைக்கப் பட்டது. உபவாசம் ஆரம்பித்த பொழுது அவர் இது பற்றி, "நான் இது வரையில் ஒரு பிச்சைக் காரனுடைய வாழ்க்கையே வாழ்ந்து வந்திருக்கிறேன் இனியும் நான் பிச்சையெடுத்து வாழ வேண்டியவனே. ஆனல் இனி பிறர் உழைப்பின் பயனுக தரக்கூடியதையே பெறுவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். நானும் என்னல் முடிந்த அளவு உடலால் உழைத்துக் கொண்டு தான் இருக்கப் போகிறேன்" என்ருர்.

ஸ்ரீ வினேபாஜி உபவாசத்தை முடித்த பொழுது பேசியது பின்வருமாறு:—

இயற்கையாகத் தோன்றிய உபவாசம்.

உபவாசம் செய்ய வேண்டுமென்று எனக்கு எப்படித் தோன்றிற்றென்று சொல்ல முடியவில்லை. ஏனெனில் நான் இதைப் பற்றி எண்ணியவனேயல்ல. சிறையிலிருந்து வெளி வந்தது முதலே உடலுழைப்பினுல் வாழ வேண்டும் என்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த எண்ணம் அதற்கும் முந்திய தாயினும் அது பற்றிய முடிவு சிறையில்த்தான் ஏற்பட்டது. ஆனல் ஒவ்வொரு விஷயத்திற்கும் உரிய காலம் ஒன்று இருக்கிறது. அந்தக் காலம் வராதிருக்கும் வரையில் எண்ணம் அனுஷ்டானத்திற்கு வருவதில்லை. உரிய காலம் இப்பொழுது வந்து விட்டதென்று தோன்றியதால் உழைப்பு வாழ்க்கையை இந்த காந்தி ஜயந்தி சமயத்தில் ஆரம்பிப்பதென்று தீர்மானித்தேன். ஒன்றிரண்டு நாட்களுக்கு முன் வல்லபஸ்வாமியிடம் இதைப் பற்றி பேசிக் கொண்டிருந்த பொழுதும் உபவாசத்தைப் பற்றிய எண்ணம் எதுவும் எழவில்லை.

பாரமார்த்திக வாழ்க்கையில் உபவாசத்திற்கு திட்டமான இடமுண்டு என்பது என் கருத்தாயினும் நான் உபவாசத்தை இரண்டாம் பக்ஷமாகவே மதிப்பவன். முக்கியமாக பக்தி, வேதாந்தம் ஆகிய இரு தத்துவங்களிலும் நான் ஊறியவன். இவை இரண்டுமே உபவாசம் இருப்பதை இரண்டாம் பக்ஷமாகவே கருதுகின்றன. ஆகையால் நான் பாபுவின் அருகாமையிலிருந்து பழகியிருந்த போதிலும் விசேஷ சந்தர்ப்பங்களில் நானே உபவாசம் செய்ய நேர்ந்திருந்த போதிலும் உபவாசம் யோக நிலையாகாது என்பது என் கருத்து. நாம் ராட்டையை பார்த்து, "உன்னை வேண்டிய மட்டும்

சுற்றுவோமே தவிர ஒரு சொட்டு எண்ணெயும் ஊற்றமாட்டோம்'' மென்று சொல்வதில்லை. ராட்டை வேறு, நாம் வேறாயிருப்பதைப் போல உடலிலிருந்து நாம் வேறாகவே இருக்கிறோம். அறிவில் இத்தகைய உறுதி ஏற்பட்டு விட்டபின் உடலுக்கு உணவு தாக்கூடாதென்ற எண்ணமே உதிப்பதில்லை. ஆயினும் உபவாசம் செய்ய வேண்டு மென்ற எண்ணம்தானே உதிக்கவே இந்தமூன்று நாள் உபவாசத்தைச் செய்தேன்.

மூன்று நாள் உபவாசமென்பது அவ்வளவு பெரிய விஷயமில்லையாயினும் என் கருத்துப்படி அது பெரிய விஷயமே. ஏனெனில் சாதாரணமாக நான் உபவாசம் செய்வதற்கு தகுந்தவனல்ல. ஆனால் தூண்டுதல் என்னவோ ஏற்பட்டது. உபவாசமும் செய்தாகி விட்டது. இந்தத்தூண்டுதல் எப்படி ஏற்பட்டது, எங்கிருந்து ஏற்பட்டது என்றால் அது எனக்கே தெரியாது.

விரதங்களில் உறுதி கொள்வோம்.

ஆரம்ப நோக்கத்தைப்பற்றி சந்தேகமில்லை. நமது ஆசை உலகெங்கும் சகோதர பாவம் நிலவவேண்டும்; அன்பு பாவவேண்டும், அஹிம்சையின் ஆட்சி நிலவவேண்டும் என்பது. இந்த ஆவல் நிறைவேறவேண்டுமானால் நம்மிடையே உடல் வலிவுள்ள நபர் ஒவ்வொருவரும் உழைத்து வேலை செய்யவேண்டும். உடல் உழைப்பை நாம் ஒரு விரதமாகவே கொண்டிருக்கிறோம். 11 விரதங்களுள் அதற்கு ஒரு இடமும் தந்திருக்கிறோம். நாம் பிரதிதினமும் அதை வாயால் ஓதிய போதிலும் பல காரணங்களினால் உடல் உழைப்பின் மூலமாகவே நிர்வாகம் செய்வதென்ற விஷயத்தில் நம்மால் உறுதியாயிருக்க முடியவில்லை. இதற்கு நமது விசேஷ நிலைமை காரணமாகையால் நாமும் இதற்குப் பொறுப்பாளியல்ல. ஆனால் இனிமேலோ, நமக்கு இப்பொழுது சுயராஜ்யம் கிடைத்து விட்டதால் நாம் செய்துள்ள முடிவுகள் எல்லாவற்றையும் அதிக உறுதியுடன் நிறைவேற்றும் பொழுதுதான் அது உண்மை சுயராஜ்யமாகும் அப்பொழுதுதான் உலகம் முழுமைக்கும் விடுதலைக்கு வழிபிறக்கும். இந்த சமயத்தில் நமது முடிவுகளில், விரதங்களில் உறுதி கொள்ளாதிருந்து விடுவோமானால் நாம் அதபாதாளத்தில் ஆழ்ந்து போவோம். ஒன்று பெற்றுள்ள சுயராஜ்யத்தை இழந்து விடுவோம். அல்லது இந்தியா ஹிம்சை வழி செல்லத் தொடங்கிவிடும். இந்த இரு ஆபத்துக்களிலிருந்தும் நாம் தப்பவேண்டும். ஆகையால் நாம் ஏற்றுள்ள எல்லா விரதங்களையும் இப்பொழுது புதுப்பித்துக் கொள்ளவேண்டும். உடலுழைப்பென்பது நாம் செய்யப்புகுந்துள்ள சாதனையின் ஒரு அங்கமாகும். இது அவ்வளவு சிரம சாத்தியமானதல்ல. அஹிம்சையை பூர்ணமாக அனுஷ்டித்தல் சிரமம். ஏன், அசாத்தியமென்று கருதப்படுவதைப்போல் இந்த விரதத்தின் விஷயத்தில் சொல்லமுடியாது. இன்று கோடிக்கணக்கான மக்கள் உழைத்தே உயிர் வாழ்கிறார்கள். ஆனால் உழைப்பென்பது அவர்கள் ஏற்றுள்ள விரதமல்ல. நாம் விரதத்தில் கொள்ள வேண்டிய உறுதியுடன் அவர்களைப் போல உழைப்பையே நம்பி வாழ விரும்புவோமானால் அதை நடைமுறைக்கு உதவாததென்று சொல்ல முடியாது. அதனால் நமது வாழ்க்கை பயனுள்ளதாவதோடு உலக வாழ்க்கையும் புனிதமடையும்.

மங்களக்காட்சி.

இப்பொழுது கிணற்றிலிருந்து ஏற்றம் இறைக்கும்பொழுது 8 வயது பாலர் முதல் 60 வயது கிழவர்கள் வரையில் அனைவரும் அதில் கலந்து கொள்ளுகிறார்கள். பெண்கள் ஆண்கள் எல்லோரும் அதைச் செய்கிறார்கள். ஒரே

பூமாதேவிக்கு எல்லோரும் செய்யும் இந்த பூஜை எவ்வளவு ரம்மியமாய் எவ்வளவு மங்களகரமாயிருக்கிறது! உழைப்பில் இத்தகைய உறுதி இருக்குமானுல் எங்கும் ஒரே ஆனந்தம்தான். இந்த உலகமே தேவலோகமாக, கோகுலமாக மாறிவிடுமென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

பிரதிநிதியாகச் செய்யும் சோதனை.

ஆகையால் வாரீர், உறுதியுடன் நாம் இதைத் தொடங்கி ஏற்றுள்ள விரதத்தில் நிலைத்து நிற்போம்! கடவுள் நமக்கு இதற்கு வேண்டிய பலத்தை அருள வேண்டுமென்பதே நாம் இன்று செய்து கொள்ளும் பிரார்த்தனை.

என்னுடைய இந்தத் தீர்மானம் பார்வைக்கு என் சொந்த விஷயமாகத் தோன்றியபோதிலும் (ஆரம்பத்தில் இம் மாதிரியான தீர்மானங்கள் அல்லது விரதங்கள் ஒருவர் சொந்தத்தில் செய்வதாகவேதான் இருக்க முடியும்) அவை அந்த ஒரு மனிதனுடன் மட்டும் பிணிப்புண்டு நிற்பதில்லை. நானே சமூகம் அனைத்தின் சார்பிலேயே இதை ஆரம்பித்திருக்கிறேன். மொத்தத்தில் இங்கே வேலை திருப்திகரமாக நடந்துவருகிறது. இதிலுள்ள குற்றம்குறைகள் கடவுளின் கிருபையினுல் விலகிப் போகும். இந்தச் சோதனையின் பயனை நாம் நடத்தப் போகும் வாழ்க்கை சாம்ய வாழ்க்கை, அஹிம்சை வாழ்க்கை அல்லது தார்மிக வாழ்க்கையென்று சொல்லத் தகுதி பெறுமென்று எதிர்பார்க்கிறேன். இது ஈடேறுமானுல் நமது வாழ்க்கை பயன் பெற்றதாகும்.

—(ஸர்வோதயம்— அக்—'50)

ஸர்வோதய குறிப்புகள்.

கதரில்லாத பொழுது எதிலும் ருசியில்லை.

..........**நா**ள் செல்லச் செல்ல கதரைப் பற்றிய என் கருத்து அதிக உறுதி பெற்றுக்கொண்டே வருகிறது. கதர் இல்லாதபொழுது வேறெதுவும் எனக்கு ருசிப்பதில்லை. கதரை விட்டுவிட்டு மற்ற எல்லாவற்றையும் செய்தாலும் நாம் நமது தத்துவத்தை இழந்தவர்களாவோம் என்ற உறுதி எனக்கேற்பட்டு விட்டது. சிறியோர், பெரியோர் ஆகிய எல்லா ஊழியர்களும் முன்பு நூற்கக் கற்றுக்கொண்டதைப் போல இப்பொழுது நெய்ய கற்றுக் கொள்ளவேண்டும். சாத்தியமானுல் தமக்கு வேண்டியதை தாமே நெய்து கொள்ளவேண்டும். ஈரிழையில் இது சாத்தியமாகையால் ஈரிழை முறுக்க வேண்டும். ஈரிழை இல்லாமலே நெய்ய முடிந்தால் அவ்வாறே செய்து கொள்ளட்டும். வல்லபஸ்வாமி சமீபத்தில் தனது நூலை 3, 4 தினங்களில் தானே நெசவு செய்துகொண்டுவிட்டார். வெகு காலமாக நெய்யும் பழக்கம் விட்டுப்போய் விட்டதால் சிறிது சிரமமாயிருந்ததாக அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறுர். பாடப் பாட ராகம் என்பதைப் போல கர்மயோகமும் இடையருமல் செய்துவரும்பொழுது தான் சுலபமாயிருக்கும்.

கிராம சேவை புரிய கிராமவாசியாக வேண்டும்.

............பாரத மாதா தனது சின்னஞ் சிறு கிராமங்களில் வாழ்கிறாள். பாவோ (கஸ்தூரி பா காந்தி) பாரத மாதாவே மானிட உருவில் வந்தது போன்றவர். கஸ்தூரி பா கிராமத்தில் பயிற்சிபெறும் சேவிகைகள் பயிற்சியின் மூலமாக பெறும் பண்பாட்டினால் கிராமப் பற்றும் கிராமங்களிடம் பக்தியும் உடையவர்களாகி உண்மையான கிராம மக்களாவார்களென்று நான் எதிர்பார்க்கிறேன். கிராமத்தைச்சேர்ந்தவர்களாக நம்மை ஆக்கிக்கொள்ளாத வரையில் நம்மால் கிராம மக்களுக்கு சேவை செய்யமுடியாது என்பது நான் அனுபவத்திலிருந்து கண்ட முடிவாகும்................

* *

புதிய ஆட்சி, புதிய கல்வி.

நாஸிக் காங்கிரசுக்குப் பிறகு நாளது வரையில் ஸர்தார் வல்லபாய் படேல் பேசியுள்ள பேச்சுக்களிலெல்லாம் அவர் தற்பொழுது வழங்கும் கல்வி முறையினிடத்தில் தமக்குள்ள ஆழ்ந்த அதிருப்தியை வெளியிட்டுக்கொண்டே வந்திருக்கிறார். இப்பொழுது ஹைஸ்கூல்களிலும் கல்லூரிகளிலும் அளிக்கப்படும் புஸ்தகப்படிப்பு முற்றிலும் பயனற்றது என்பது மட்டுமல்ல, தீமை விளைவிக்கக் கூடியதுமாகும் என்று அவர் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவந்தார்.

ஒரு சாதாரணமானவரோ பதவியிலுள்ளவரோ வேறு ஒருவரோ இதைக் குறித்துச் சிந்தித்து இவ்வாறு சொல்லுவதென்பது வேறு விஷயம். ஆனால் நாட்டினுடையவும், தேசீய சர்க்காரினுடையவும் அதிகாரத்தையே தாங்கிநிற்கும் தலைவரொருவர் இத்தகைய அபிப்பிராயத்தை வெளியிடும் பொழுது எவரும், "உங்கள் அபிப்பிராயத்தில் வழங்கும் கல்விமுறை இவ்வளவு மோசமானதென்றால் நீங்கள் அதை ஏன் மாற்றவில்லை" ?என்றுகேட்கத்தான் செய்வார்கள். இதற்கும் சர்தார் வல்லபாய் அகமதாபாதில் பேசும்பொழுது பதில் சொல்லியிருக்கிறார். "நாம் எல்லோரும் பெரிய வலையில் சிக்குண்டிருக்கிறோம். அதிலிருந்து வெளியேறுவது சிரமமாயிருக்கிறதென்று" அவர் கூறியிருக்கிறார்.

* *

பள்ளிக்கூடங்களை அடைத்து விடுங்கள்.

எவ்வளவு சிரமமாயிருந்த போதிலும் வலையை அறுத்து வெளியேறியாக வேண்டுமென்ற கருத்து அவருடைய பேச்சில் த்வனிக்கிறது. நானே இது பற்றிய என் அபிப்பிராயத்தை பல தடவைகளில் தெளிவாக வெளியிட்டிருக்கிறேன். அதாவது பாபூ நமக்கென வகுத்துத்தந்த புதிய கல்விமுறை நமக்கு திருப்தியளிக்காமல் புதிய கல்விமுறையொன்றை கண்டுபிடித்தாவதற்கு சிறிது காலமாகுமானால் கல்வி சாஸ்திரவல்லுனர் எல்லோரும் கூடி அமர்ந்து ஆலோசித்து ஒரு முடிவு செய்வதற்கு எவ்வளவு காலமாகுமோ அது வரையில் இப்பொழுது நடக்கும் பள்ளிகளுக்கும் காலேஜ்களுக்கும் விடுமுறையளித்து விடவேண்டும். இதனால் பழைய தீய கல்விமுறையை தொடர்ந்து நடத்தி வருவதனால் விளையக்கூடிய அளவு தீங்கு நேர்ந்துவிடாது.

புதிய ஆட்சி, புதிய கொடி.

ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கையில் நான் ஒரு நண்பரிடம் புரட்சியின் பயனாக பழைய ஆட்சி கவிழ்ந்து புதிய ஆட்சி தோன்றும் பொழுது அந்தப் புதிய ஆட்சியில் பழைய கொடியையே பறக்க விட முடியுமா என்று கேட்டேன். முடியாது என்ற பதில் சிறிதும் தயக்கமின்றி வந்தது. கல்வியின் விஷயத்திலும் இதையேதான் செய்ய வேண்டுமென்று நான் சொன்னேன். புதிய ஆட்சியில் புதிய கொடி இருக்கவேண்டுமென்று சொல்வதைப் போல புதிய ஆட்சியென்றால் கல்வியும் புதிதாகவே தான் இருக்க வேண்டும். புதிய ஆட்சி வந்த பிறகும் கல்வி மட்டும் பழையதே நடந்து வருமானால் ஆட்சி புதியதென்பது வெறும் மேல் பூச்சே. உண்மையில் உள்ளே நடப்பது பழைய ஆட்சி முறைதான் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

★ ★ ★

இது நூற்பு வேள்வியுகம்.

................சகோதரிகளும் குழந்தைகளுமாகச்சேர்ந்து நீங்கள் செய்துவரும் காரியம் கடவுளுக்கு மகிழ்ச்சிதரக்கூடியதாகும். இந்தக் காலத்தில் கதர் செலவாவதில்லை. கதர் வஸ்திராலயங்களில் கதர் விற்பனையாகாமல் போர் போராகக் கிடக்கிறது என்று காதில் விழுகிறது. ஆனால் எனக்கு இதைக் கேட்க அதிக வருத்தமாயில்லை. ஏனெனில் நூற்பு வேள்வி நடத்த வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றியிருப்பதைப் போல் இந்தியாவில் பலவிடங்களில் இன்னும் பலருக்குத் தோன்றியிருப்பதாக அறிகிறேன். விற்பனைக்காக கதர் உற்பத்தி செய்துவந்த காலம் மலையேறி எத்தனையோ காலமாகிவிட்டது. இது நூற்பு வேள்விகள் நடத்த வேண்டிய காலம். இவ்வளவு பிரமாண்டமான நாட்டில் ஒரு சில இடங்களில் வேள்வி நடப்பதென்பது பிரமாதமா என்று தோன்றும். ஆனால் ஒரு சிறிய ஆலின் விதையிலிருந்து பெருத்த ஆலமரம் தோன்றுவதைப் போன்ற சக்தி இதில் அடங்கியிருக்கிறது.

★ ★ ★

பெரு வேள்வியுடன் தினசரி வேள்வி.

82 நாள் வேள்வி நடத்திவிட்டு 283 நாள் வேள்வியின்றி கழிப்பது என்பது சரியல்ல. 82 நாள் பெரு வேள்வியும் எஞ்சும் 283 நாளும் தினசரி வேள்வியும் செய்து வரவேண்டும். நூற்பில் பட்டை போடுதலும் அடங்கும் என்று உங்களுக்குப் பிரத்யேகமாகக் குறிப்பிட்டு எழுத விரும்புகிறேன். ஏனெனில் பலவிடங்களில் விலைக்கு வாங்கிய பட்டைகளைக் கொண்டு நூற்குப் வழக்கம் இருந்து வருகிறது. இவ்வாறு பிறர் தயாரித்த பட்டையைக் கொண்டு செய்யப்படும் நூற்பு, வேள்வி நூற்பு ஆகாது.

வினோபாஜி.

(ஸர்வோதயம்—நவம்பர்-'50.)

ஸர்வோதய நூல் காணிக்கை:

ஒரு சிட்டம் நூல் காணிக்கையின் மூலமாக கதர் சுயதேவைப் பூர்த்திக்கு ஊக்கமளிப்பதற்கும், பக்தியில் எல்லோரும் சமம் என்ற கருத்து வெளியாவதற்கும், இடம் இருக்கிறது. பணம் பெறுவதற்கே இடம் இருக்கக்கூடாதென்று சொல்வதன் கருத்து, நாம் உடல் உழைப்பினால் உற்பத்தி செய்யும் பொருளையே காணிக்கையாக அளிக்க வேண்டும், அதுவே புனிதமான வஸ்து என்பது.

— வினோபாஜி.

தேனீக்களின் மகத்துவம்.

அழிவுறும் மகரந்தம்.

பாரத நாடு விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டது. கணக்கிட்டுப் பார்த்ததில் இங்கே எத்தனையோ டன்கள் எடையுள்ள தேன் உற்பத்தியாகியும் போதிய தேனீக்கள் இல்லாமையால் 80% தேன் பாழாகிறதென்று தெரிகிறது.

புஷ்பங்களில் மகரந்தமும், மணமுள்ள பராகம் என்ற பொருளும் இருக்கின்றன. இவை இரண்டும் சேரும் பொழுதுதான் விதை உண்டாகிறது. தேனீக்களின் மூலமாக புஷ்பங்களின் விதைப் பராகம் வினியோகிக்கப் படுவதால் பயிரின் விளைவு அதிகமாகிறது. சில சமயங்களில் பயிரின் புஷ்பங்களில் தேவையை விட அதிகமாக மகரந்தம் இருப்பதுண்டு. அதனால் விதை உருவாவது தடைப்பட்டு விளைவு குறைந்து போகிறது. தேனீக்கள் மகரந்தத்தை உறிஞ்சுவதனால் விளைவு பெருகுவதற்கு உதவியேற்படுகிறது. விஷயம் அறிந்தவர்கள் தேனீக்களின் மூலமாக பழங்களும் சரி, தானியங்களும் சரி 5% லிருந்து 10% வரையில் அதிகமாகலாமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகையால் வயல்களில் பயிர்கள் பூத்ததும் தேனீக்களின் தொகையை பெருக்குதல் அவசியமாகும்.

தேன் உற்பத்தியாகும் விதம்.

தேனீக்கள் புஷ்பங்களிலிருந்து மகரந்தத்தை உறிஞ்சி நமக்குத் தேனைக் கொடுக்கிறது. காட்டுப் பூக்களிலும் சரி, தோட்டத்திலுள்ள பூக்களிலும் சரி காய்கள் தோன்றுவதற்கு முன் மகரந்தம் வழிந்து கொண்டேயிருக்கும். இந்த மூலப் பொருளை மிகுந்த உழைப்பினால் தன்னுடலிலுள்ள யந்திரத்தின் மூலமாக அவை தேனாக மாற்றுகின்றன. தேனீக்கள் ஒரு துளி தேனுக்காக 500, 600 புஷ்பங்களில் அலைகின்றன. அவை மணிக்கு 20 மைல் வேகத்தில் பறக்கின்றன. அவைகளின் உடல் இம்மாதிரி சுற்றித் திரிவதற்கு வசதியாக அமைந்திருக்கிறது. அவற்றிற்குள்ள மோப்ப சக்தி மிகவும் அதிகமாகையால் 1 பர்லாங் தூரத்தில் மலர்ந்துள்ள புஷ்பத்தின் வாசனையைக்கூட அவை தெரிந்து கொள்ளுகின்றன. இதனாலேயே அவை பல இடங்களிலிருந்தும் புஷ்பங்களின் தேன் சத்தையும் மகரந்தத்தையும் சேர்க்கும் வேலையை சுலபமாகச் செய்கின்றன.

தேனின் தட்டுப்பாட்டிற்குக் காரணம்.

1) தேனீக்களை வளர்க்காமை.
2) சரியான முறையில் தேனை சேகரியாமை.

நம் நாட்டில் மற்றத் தொழில்களைப் போல் இந்தத் தொழிலுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் நாம் இதன் தன்மையைப் புரிந்து கொள்ளாதிருப்பதே.

நம் நாட்டில் அறியாமையினால் தேனை எடுக்கும் பொருட்டு தேனீயின் அடையை தீயிட்டுப் பொசுக்குகிறார்கள். இவ்வாறு பொசுக்கும்போது எண்ணிலடங்காத ஈக்கள் இறந்து போகின்றன. அவற்றின் குடும்பங்களே அழிந்து போகின்றன. இந்தப் படு கொலைக்குப்

பிறகு அடையிலுள்ள தேனை பிழிந்தெடுக்கிறார்கள். இவ்வாறு எடுக்கப்படும் தேனில் முட்டைகள், குஞ்சுகள், பிற அழுக்கு ஆகிய எல்லாம் பிழியப்பட்டு சேர்ந்தே இருக்கின்றன. இதனால் நமக்குக் கிடைக்கும் தேன் அசுத்தமாயிருப்பதோடு கிடைக்கும் தேனும் மிகவும் குறைந்து போகிறது. ஈக்களின் குடும்பங்களே அழிவுறுவதால் நாட்டின் தேனீக்கள் என்ற சொத்தும் குறைந்து போகிறது. தேனீக்கள் இவ்வாறு அழிக்கப்படுவதால் மேலே கூறிய படி நாட்டின் தேன் உற்பத்தி குறைவதோடு பிற தானியங்கள் காய்கறி பழ வகைகளின் விளைவும் குறைந்து போகிறது. ஆகையால் தேனீக்கள் அழிக்கப்படுவதை நிறுத்த வேண்டும்.

உபாயம்.

தேனீக்களை வளர்த்தால் தேனை மட்டும் அவற்றினிடமிருந்து பறித்தல் திருட்டே. இம்முறை இயற்கைக்கும் முரணாகும். இயற்கைக்கு மாறாகச் செய்யப்படும் எந்த காரியமும் நிலைப்பதற்கில்லை, அதனால் நாட்டிற்கு நன்மையும் விளையாது. ஆகையால் இந்தத் தொழிலை வளர்ப்பதற்கு நாமும் நமது சர்க்காரும் தீவிரமாக முயல வேண்டும்.

விவசாயத்தில் தேனீக்களினால் விளையக்கூடிய நன்மைகளை கிராம மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்கள் தேனீ பெட்டிகள் வைத்து ஈக்களை வளர்ப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். தேனீக்களை வளர்ப்பதனால் அவற்றின் வம்சம் விருத்தியாகும். நாம் அனுஷ்டிக்க விரும்பும் முறையில் ஈக்களுக்கு எத்தகைய கஷ்டமோ அவற்றின் குடும்பத்திற்கு நஷ்டமோ ஏற்படாது. அப்பொழுது தேனீக்களின் தொகை நாளுக்கு நாள் வளருமாகையால் தேன் உற்பத்தி பெருகுவதோடு விளைச்சலும் அதிகமாகும். பழைய அநாகரீகமான முறையில் தேனை எடுப்பதை சமூக துரோகமென்று கருதுவதோடு இம்மாதிரி எடுத்த தேன் விற்கப்படுமானால் நாம் அதை வாங்க மறுக்க வேண்டும். குறைந்த பக்ஷம் சர்க்காரில் விவசாய இலாக்காவில் பழைய முறையை பின்பற்றுதிருத்தல் அவசியமாகும்.

இவ்வாறு தேனை உபயோகிக்கும் ஒவ்வொருவரும் பழைய முறையில் எடுக்கப்படும் தேனை தொடுவதில்லை என்று தீர்மானித்து தேனீக்கள் வளர்க்கக்கூடியவர்கள் அவற்றை வளர்த்து, சர்க்காரும், பொதுஜன ஸ்தாபனங்களும், தேனீ வளர்ப்பதின் மகத்துவத்தை எங்கும் பரப்புவார்களானால், நம் நாட்டில் தேன் உற்பத்தி வெகுவாகப் பெருகுவதோடு உணவுப் பண்டங்களின் விளைவும் அதிகமாகும்.

(ஸ்ரீ அம்ருத ராவ் காட்கே, நவம்பர் '50 ஸர்வோதயத்தில் எழுதிய கட்டுரையின் சாரம்)

நமது ஸர்வோதய பிராயச்சித்தம்:

அன்று நாம் அனைவரும் தோட்டிகளாக தேசத்திலுள்ள குப்பையையும், அசுத்தியையும் அகற்றுவோம். நாம் தோட்டிகளை தீண்டாதாராக்கி கொடும் பாபம் புரிந்துவிட்டோம். நம் தேசத்தையே உலகத்தில் வேறு எங்கும் இணையில்லாத அளவு அசுத்தியாக்கிவிட்டோம். நாம் இவ்விரண்டு கொடுமைகளுக்கும் பிராயச்சித்தம் செய்தாகவேண்டும். எளியோர் பெரியோர் யாவரும் அடக்கத்துடன் இதை செய்யும்பொழுது ஒவ்வொருவரும் "நான் தான் இந்த உலகத்தில் மிகவும் தாழ்ந்த ஜீவன்" என்ற எண்ணத்துடன் செய்யட்டும்.

— விநோபாஜி.

வாக்கின் மகிமை.

(வினோபாஜி)

என் தந்தை இரவில் தூக்கம் கலைந்து போகும் பொழுதெல்லாம் சாஸ்திர சம்பந்தமான புஸ்தகமொன்றை எடுத்து படிப்பதை நான் என் சிறு வயதில் பார்த்திருக்கிறேன். பிறகு தூக்கம் வந்ததும் தூங்கிப் போய் விடுவார். "மெய் மறந்து தூங்கமுடிந்தால் தூங்க வேண்டும், இல்லையேல் பூர்ண விழிப்புடன் வேலை செய்து கொண்டேயிருக்க வேண்டும்" என்பார். பாபூவும் இப்படியே செய்து வந்ததை நாம் பார்த்திருக்கிறோம். நான் பெரும்பாலும் தூக்கம் கலைந்ததும் எழுந்து விடுவதில்லை. கீதை முதலிய கிரந்தங்களின் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பகுதிகளைக் குறித்துச் சிந்திக்கத் தொடங்குவேன். ஒரு சமயம் வேத மந்திரங்களையும் வேறொரு சமயம் உபநிஷத் வாக்கியங்களையும் பிறிதொரு சமயம் யோக சூத்திரங்களையும் பற்றி ஆராய்ந்து வந்தவன் இப்பொழுது 'வினய பத்திரிகா'வைப்பற்றி ஆலோசித்து வருகிறேன். இந்தியாவின் அறிவுப்பொக்கிஷம் சமுத்திரத்தைப் போன்று எல்லையற்றது, ஆழம் காண முடியாதது. அது என் சிந்தனைகளுக்கு எவ்வளவோ உதவியிருக்கிறது. நான் மற்றொரு விஷயத்தையும் கண்டிருக்கிறேன். அதாவது தூக்கம் கலைந்ததும் சிந்திக்கத் தொடங்குவோமானால் பகலில் விழிப்புடனிருக்கையில் தோன்றாத புதிய புதிய விஷயங்கள் நமக்குக் காட்சி யளிப்பதுமுண்டு; சிந்தனை தொடங்கியதும் நமக்குத் தூக்கம் வந்து விடுவதுமுண்டு. இரண்டிலுமே எனக்கு விரோதமில்லை. இவ்வாறு அவரவருடைய இயற்கைக்கு ஒத்துள்ள யுக்தியைக் கண்டு கொள்ள வேண்டும்.

இரவில் சிந்தனை சக்தியைவிட உணர்ச்சிக்கு பலம் அதிகமாகையால் நாம் அதைப்பயன் படுத்திக் கொள்ளலாம். பாபூவுக்கு ஏற்பட்ட தூண்டுதல்களில், பல அவருக்கு இரவில் தான் தோன்றின. ஆனால் என்னைப் பற்றிய வரையில் இரவில் தோன்றும் ஆலோசனைகளை ஏற்காதிருப்பதே நல்லதென்று கருதி வந்திருக்கிறேன். இரவில் தோன்றும் யோசனைகள் சூரிய வெளிச்சம் பட்டதும் அனேகமாக சக்தியை இழந்து விடுவதுண்டு. ஆகையால் சூரிய வெளிச்சத்திலும் அதை சோதித்துப்பார்க்க வேண்டியதே. அதன் பிறகும் நிலைக்கக்கூடியது மட்டுமல்ல, அதிக உறுதியாயிருக்கக் கூடியதையே நான் ஏற்பது வழக்கம்.

இவையெல்லாம் மனத்தின் விளையாட்டே. ஆத்ம நிலையில் இரவுமில்லை பகலுமில்லை; அங்கே சூரியனோ, சந்திரனோ, நக்ஷத்திரங்களோ, ஒளியோ இருளோ இல்லை. விளையாட்டு நடக்கிறது, விசித்திரமானதுதான். ஒருவர் இதை மாயை என்கிறார், இன்னொருவர் லீலை என்கிறார். ஒருவர் ஸன்னத்தம் என்கிறார், இன்னொருவர் யோக சக்தி என்கிறார். யார் எதைச் சொன்னாலும் அது என்னவென்று சொல்வது சாத்தியமில்லை. ஆனால் எவரும் சொல்லாமல் மட்டும் இருப்பதில்லை. கடவுளின் லீலா விநோதங்களை விவரிப்பதில்தான் மானிட வாக்கின் பூர்ணப்பயன் அடங்கியிருக்கிறது. விவரிக்கக் கூடியதை விரித்துக் கூறுவதில் அர்த்தமில்லை. விவரிக்க முடியாததை விவரிக்க முயலுவதிலேயே சாரமிருக்கிறது. அதை விவரிக்கச் செய்யும் முயற்சியிலேயே வாக்கின் வெற்றியும் அடங்கியிருக்கிறது.

(ஸர்வோதயம்—அக்—'50)

மஹாதேவ் தேசாயின் இறுதி நாட்கள் நான்கு.

(சென்ற டிசம்பர் மலரில் வெளிவந்ததன் தொடர்ச்சி)

ஸ்ரீமதி. ஸுசீலா நையார்.

இன்று பிரார்த்தனையில் மஹாதேவ் பாயி பக்த துகாராமின், "பக்த ஜஸே ஜானு ஜேதேஹி உதாஸ்" என்ற மராத்தி அபங்கம் பாடினர். பிரார்த்தனைக்குப் பிறகு நான் அவரை அந்தப்பாட்டின் பொருளை கூறும்படி கேட்டுக்கொண்டேன். அவர் விளக்கிக்கூறினர். நான் வந்த பிறகு பிரார்த்தனையில் ராமாயணம் பாடப்பட்டு வருகிறது. உத்திர காண்டத்தின் எந்த இடத்தில் ஆசிரமத்தில் நிறுத்தப்பட்டிருந்ததோ அங்கிருந்து தொடங்கி படிக்கப்படுகிறது. தாளம் போடுவதற்கு சப்ளா இல்லாமையினல் பாபூ மீராபஹனை வெண்கலக் கிண்ணத்தையும் 'சம்சா' கரண்டியையும் தாளத்திற்கு உபயோகிக்கச் சொல்லியிருக்கிருர். அவற்றைக் கொண்டு தாளம் போடும் விதத்தையும் காட்டியிருக்கிருர்.

நேற்று காலையில் உலாவி வருகையில் நாங்கள் மாளிகையின் எதிரிலுள்ள தோட்டத்திற்குள் போனும். மேலே எதிரிலுள்ள தாழ்வாரத்தில் மரச்சட்டங்களைக் கொண்டு 'கிராதி' அடிக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது வர்ணத்தைப் பூசி அது எதோ வெகுகாலமாக இருந்து வந்தது போலவும் இது முஸ்லீம்கள் வீடாகையால் கோஷாப் பெண்களுக்காக அமைந்துள்ள மறைவென்று பார்ப்பவர் எண்ணிக் கொள்ளட்டுமென்றும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் இது இப்பொழுதுதான் புதிதாக அடிக்கப் பட்டது என்ற விஷயத்தில் பாபூவுக்குச் சந்தேகமில்லை. எங்களை வெளியிலுள்ள எவரும் பார்க்கக்கூடாதென்பதே இந்த அடைப்பின் நோக்கம். நேற்று அந்தப் பக்கமாகச் சுற்றிக் கொண்டு வருகையில் காந்திஜியின் சந்தேகம் உண்மையானதென்று ருஜுவாகிவிட்டது. கிராதிக்காக வந்திருந்த புதிய சட்டங்களின் துண்டுகள் சில அங்கே கிடப்பதை மஹாதேவ் பாய் கண்டார். இந்தக் கிராதிகள் கட்டிடம் கட்டிய காலத்திலேயே அடிக்கப் பட்டிருந்தால் இந்தப் புதிய மரத்துண்டுகள் இங்கே கிடப்பதற்குக் காரணமென்ன? பிறகு மேலே சென்று பார்த்த பொழுது இங்கிருந்த வாயிலையும் அதேவகை கிராதியுள்ள கதவொன்றினல் அடைக்கப் பட்டிருப்பதைக் கண்டோம். இந்தக் கதவின் வெளிப்புறத்தில் வர்ணம் பூசப் படவில்லை. மறந்தோ அல்லது தேவையில்லை என்ற எண்ணத்தினலோ பூசாமல் விட்டிருந்தார்கள். அதைப்பார்த்ததில் இது புதிதாக அமைக்கப் பட்ட கதவு என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது. இந்தத் தாழ்வாரத்தில் பாபூ நின்ருல் வெளியிலுள்ளவர்கள் அவரை நன்ருகப் பார்க்க முடியுமாகையால் இங்கே உட்கார்ந்தபடியே பாபூ வெளியிலுள்ள ஜனங்களைத் தூண்டி விடுவார் என்ற பயம் போலும் சர்க்காருக்கு!

நாற்புறமும் முள்வேலி அமைத்து தோட்டத்தின் ஒரு சிறு பகுதியை மட்டும் எங்கள் உபயோகத்திற்கு ஒதுக்கியிருக்கிருர்கள். வெளிச்

சுவற்றிற்கும் இந்த முள்வேலிக்கும் சுமார் 75 கெஜம் இடைவெளி இருக்கும்படி செய்திருப்பதன் நோக்கம் நாங்கள் வாயிற்படியிலிருந்து எட்டிப் பார்த்து வெளியிலுள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு விடக் கூடாது என்பது. ஆனால் இந்த முள்வேலியில் இடையிடையே பெரிய திறப்புக்கள் இருப்பதால் விரும்பினால் எவரும் சுலபமாகத் தப்பி ஓடிவிடலாம். இந்த முள்வேலிக்கு உட்புறத்தில் 6 சிப்பாய்கள் எங்கள் பாதுகாப்புக்கென நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு வேண்டிய உதவிகளும் செய்து கொண்டிருக்கிறார்கள். சுமார் 1 டஜன் தண்டனை பெற்ற கைதிகள் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரையில் இங்கே துப்புரவு முதலிய வேலைகளைச் செய்கிறார்கள். 15-20 கைதிகள் தோட்டவேலைக்கு வருகிறார்கள். வேலிக்குவெளியே 72 சிப்பாய்கள் பாரா கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே வருகிறவர்கள் அனைவருக்குமே இந்த இடம் ஒரு கொடிய சிறையாகி விடுகிறது. எங்களுடைய ஜெயிலரான மிஸ்டர் கடேலி இங்கே தனித்தே இருந்து வருகிறார். அவருக்கு பத்திரிகை படிப்பதற்குக் கூட முடிவதில்லை. பத்திரிகை படிக்க அவருக்கு அனுமதி இல்லையோ அல்லது தன் கடமையில் கண்ணும் கருத்துமாயிருப்பதனால் வேண்டுமென்றேதான் பத்திரிகை படிப்பதில்லையோ தெரியவில்லை. பத்திரிகைகள் படிப்பதற்கு எங்களுக்கு அனுமதி இல்லை. ஆகையால் அவர் படிப்பாரானால் ஒவ்வொரு சமயங்களில் எங்கள் காதில் விழக்கூடாத செய்திகளை அவர் அஜாக்கிரதையினால் எங்களுக்குத் தெரிவித்து விடலாமல்லவா?

மஹாதேவ்பாயோ யாருடன் பழகினாலும் அவரை அப்படியே வசிகரித்து விடும் சுபாவம் உள்ளவர். மிஸ்டர் கடேலியுடனும் அவர் மிகவும் நெருக்கம் கொண்டு விட்டார். முதல் கடிதம் தயாரானதும் அதை மிஸ்டர் கடேலியிடம் கொடுப்பதற்காக மாஹாதேவ் பாய் மாடிக்குப் போனார். கடிதத்தை வாங்கிக்கொண்டபின் பேச்சிடையே மிஸ்டர் கடேலி, உங்களுக்கு மேலே வருவதற்கு அனுமதியில்லை நீங்கள் இங்கே வருவதற்கு முன் ஒரு போலீஸ் அதிகாரி இங்கே வந்து இந்த மாடிப்படியின் எதிரில் "உள்ளே எவரும் பிரவேசிக்கக் கூடாது" என்று ஒரு நோட்டீசை தொங்கவிட்டு விடுங்கள் என்றான். நான் முடியாதென்றேன். அவர்களுள் எவரும் தாமே மேலே வரக்கூடியவர்கள் இல்லையாகையால் நோட்டீஸே தேவையில்லை என்றேன். அதற்கு மஹாதேவ் பாய், 'சரி, விஷயம் புரிந்து விட்டது. இனி வரமாட்டேன்" என்றார் அன்று முதல் அவர் மாடிக்குப் போவதையே நிறுத்திக்கொண்டார். மஹாதேவ் பாய், விவேகம் என்பதே உருவெடுத்து வந்தவரல்லவா!

மிஸ்டர் கடேலி நல்ல மனிதர், இளகிய மனம் படைத்தவர் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கடமையையும் பூர்ணமாகச் செலுத்துகிறார். அவருடைய மனைவி காலஞ்சென்று விட்டாள். வீட்டில் வயது சென்ற தாயும் குழந்தைகளும் இருக்கிறார்கள். அடிக்கடி தன் தாயை நினைத்துக்கொள்ளுகிறார். பாபுவினிடம் மிகுந்த பக்தி காட்டிய போதிலும் சர்க்காருக்குத் தாம் செய்ய வேண்டிய காரியங்களில் சிறிதும் குற்றம் குறைக்கு இடம் வைப்பதில்லை. பாவம் இவர் ஆரம்பத்தில் வெளியிலிருந்து சாப்பாடு தருவித்து சாப்பிட்டுக்

கொண்டிருந்தார். அது இங்கே வருவதற்குள் ஜில்லிட்டு போய் விடும். இதனால் சரோஜினி நாயுடு அவருக்கும் இங்கேயே சாப்பாடு போடத் தொடங்கினார். சந்தடியின்றி சாப்பிட வருவதும், சாப்பிட்டு விட்டுப் போவது மாயிருந்தார். நாள் முழுவதும் பேச்சுத்துணைக்கும் அவருடன் ஒருவருமில்லை. சிப்பாய்களுடன் என்னதான் பேச முடியும்! சிற்சில சமயங்களில் மஹாதேவ்பாய் அவருடன் பேசிக் கொண்டிருப்பதுண்டு. ஆனால் நாங்களோ கைதிகள். அவர் எங்களுடன் எவ்வளவு பேசிவிட முடியும். சரோஜினி நாயுடு, "நம்மைப் போல் அவரும் கைதி தான். ஆனால் சிறைசென்ற தேச பக்தர்களென்ற பெருமை நமக்குக் கிடைத்திருக்க அவருக்கு அதுவுமில்லை" யென்றார்.

இங்கேயுள்ள சிப்பாய்களும் தம் வீட்டிற்குப் போக முடியாது. சிப்பாய்களின் ஜமேதார், ரகுநாத் என்பவன் கெட்டிக்காரன். 1932ல் பாபூ சிறைக்குச் சென்ற காலத்திலும் இவன் எரவாடா சிறையில் பாபூவுக்கு சேவை செய்தவன். சரோஜினி நாயுடு எரவாடா சிறையிலிருந்த பொழுதெல்லாம் இவன் கடைத்தெருவிலிருந்து அவருக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். நல்ல சுறுசுறுப்புள்ளவன். சாமான் வாங்குவதற்குக் கடைத்தெருவுக்கு போகும் பொழுது தன் வீட்டையும் எட்டிப் பார்த்து விட்டு வருவான். சிப்பாயின் உடுப்புடன் அவன் வெளியே போவதில்லை. ஏனெனில் இந்தக் காலத்தில் சிப்பாய்களை கண்டால்போதும், சிறு பிள்ளைகளும் அவர்களை பெரிதும் அவமானப்படுத்தி விடுகிறார்கள். சில தினங்களுக்கு முன் இவன் சிறையிலிருந்து எங்கள் ரேஷனை வாங்கிவந்து கொண்டிருந்தான். வழியில் வண்டியை நிறுத்தி விட்டார்கள். இன்று வேலை நிறுத்த மாகையால் வண்டி போகக் கூடாது என்று சொன்னார்கள். ரகுநாத் அவர்களிடம் வேறொன்றும் சொல்லவில்லை. வண்டியை நீங்கள் விடாவிட்டால் எனக்கென்ன? உங்கள் மனிதர்கள்தான் பட்டினி கிடக்க நேரிடும் என்றுமட்டும் மெதுவாகச் சொல்லவே அவர்கள் விட்டு விட்டார்கள். இவன் சாமான்களை கொண்டு வந்து சேர்த்தான். இவனுடைய அண்ணன், தம்பிமார் முதலிய சிலர் காங்கிரசில் சேர்ந்து சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். இவன் இதையும் தேவையான பொழுது பிரஸ்தாபித்து தன் வேலையை நிறைவேற்றிக் கொள்வான். மஹாதேவ்பாய் இவனுடனும் நல்ல சினேகம் செய்து விட்டார்.

(தொடரும்.)

கிருஹஸ்தனும் கர்மயோகமும்.

உலகம் முழுவதும் நேசிப்பதைப் போல் தன் பிள்ளையையும் நேசிக்க. இந்த நேசம் வேறு விதமாக இருக்கத் தேவையில்லை. தன் விஷயத்திலும் அவ்வாறே எண்ண வேண்டும். உன் மனதை பின் வருமாறு கேள். "உன் அயல் வீட்டான் மீது எனக்கு எவ்வளவு அன்புண்டோ அதற்குச் சிறிதும் அதிகமாக என் பிள்ளை மீது எனக்கு அன்பிருக்கிறதா?" அல்லது இதையே மாற்றி பின்வருமாறும் கேட்கலாம்." என் மீதோ, என் பிள்ளையின் மீதோ எனக்குள்ள அன்பைவிட பிறர் மீது உள்ள அன்பு குறைவா?" இந்த இரு கேள்விகளுக்கும் 'ஆம்' என்ற பதில் வருமானால் நீ செய்து வருபவை தவறு என்று முடிவு செய்து கொள்ள வேண்டியதே.

"தந்தை சேர்த்து வைத்துள்ள சொத்தெல்லாம் சமூகம் முழுமைக்கும் சொந்தமாகும். அதன் மீது எனக்குத் தனி உரிமை எதுவும் இல்லை" என்பது தனயனுடைய முடிவாயிருக்க வேண்டும். பிள்ளைக்குக் குறிப்பிட்ட வயது வரையில் தகுந்த கல்வியளிக்கும் பொறுப்பு தந்தையினுடையதே. பிறகோ அவனும் சுதந்திரமானவனே. அவன் ஒரு நண்பனைப் போல் நடந்து வர வேண்டும். தந்தையும் அவனை நண்பனைப் போலவேதான் நடத்த வேண்டும். இந்த விஷயங்களெல்லாம் மனதில் தெளிவாகி இவற்றின் படி நடந்தும் வருவோமானால் நமது குடும்ப வாழ்க்கையும் கீதையில் கூறியுள்ள கர்ம யோகமேயாகும்.

—வினோபாஜி.

* * *

ராட்டை தரும் புது யுகச் செய்தி.

ஆச்சார்ய வினோபா பாவே

ராட்டை, தொழிலுக்கும் கூட்டுறவுக்கும் சுதந்திரத்திற்கும் அஹிம்சைக்கும் சின்னமாகும். வாலிபர்கள் இவ் வேலையில் கலந்து கொண்டு வருவது மகிழ்ச்சி தருகிறது. மில்கள் தோன்றாத பழைய காலத்தில் மானத்தை மூடுவதற்கு வேறு வழியில்லாமையால் சுற்றப்பட்டு வந்த அந்தப் பழைய செல்லரித்த ராட்டையல்ல, நாம் சுற்றும் ராட்டை. அது நிர்பந்தத்தினால் சுற்றப்பட்டு வந்தது. அதில் சுரண்டலுக்கும் இடம் இருந்திருக்கலாம். நம்முடைய ராட்டை ஆலைகளுக்கு பக்க பலமாக அமைந்தவையுமல்ல. ஆகையால் ஆலைகள் இருப்பதை ஒப்பி அவைகளினால் விளைந்துள்ள வேலையில்லாத் தொல்லையை போக்குவதாக இது வீண் வேஷம் போடவில்லை. இது புதுயுகச் செய்தியை தாங்கி வருவது. இது கிராம ராஜ்யத்திற்கும் ராமராஜ்யத்திற்கும் பிரதிநிதி. ஹரி ஜனங்களுக்கும் இதர ஜனங்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமையை அழிப்பது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிநிகர் சமானமான மதிப்பளிப்பது. எல்லா மதங்களையும், சமயங்களையும் சமூகங்களையும் ஒரே ஆண்டவனிடம் அன்புக் கயிற்றினால் பிணிப்பது. இந்த எல்லாக் கருத்துக்களையும் ராட்டையைச் சுற்றும் பொழுதே சிந்தித்து வருவீர்களானால் உங்களுக்கு அதில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய இன்பம் தோன்றும்.

நூற்புடன் சொந்தத்தில் பட்டையும் போட்டுக்கொள்ள வேண்டும். நெசவுக்கும் சொந்தத்திலேயே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

(ஸர்வோதயம்—அக்—'50.)

★

மீண்டும் சென்னை சர்க்காரும், சர்க்கா சங்கமும்.

(காரியதரிசி, அகில பாரத சர்க்கா சங்கம், சேவாகிராம்.)

அகில பாரத சர்க்கா சங்கம் 7—10—1950-வ 'ஹரிஜன்' பத்திரிக்கையில் (கதர் மலரில் 1950 நவம்பர் இதழில் வெளிவந்துள்ளது) வெளியிட்ட அறிக்கைக்கு சென்னை சர்க்கார் 22—12—'50-வ பத்திரிக்கைகளுக்கு பதில் விடுத்துள்ளது. அதிலுள்ள ஒவ்வொரு பாராவிற்கும் கீழ்கண்டவாறு பதில் கொடுக்கிறோம்.

சர்க்கார் அறிக்கை: பாரா 1.

தீவிர கதர் திட்டத்தை சர்க்கார் நடத்துவதை சர்க்கா சங்கம் தூஷித்து எழுதுவதாக சர்க்கார் குற்றம் காட்டியுள்ளார்கள். கதர் மந்திரி முன் விடுத்த சில தவறுதலான விஷயங்களை சர்க்கா சங்கம் மறுத்துக் கூறியதை, சர்க்கார் கதர் திட்டத்தை நடத்துவது பற்றி சங்கம் பிரதிகூலமாக கூறுகிறது என்று சொல்வது நியாயமற்றது. 7—10—'50-வ. 'ஹரிஜனிலும்,' 1950 நவம்பர்-மீ 'கதர் மலரிலும்' வந்த எங்கள் அறிக்கையை மீண்டும் வாசகர்கள் படிக்கட்டும்.

அதில் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி முடிவாகக் கூறினோம். நாங்கள் வற்புறுத்திய விஷயத்திற்கு சர்க்கார் விடுத்துள்ள அறிக்கை சரியான பதிலாகுமா என்பதை வாசகர்களே முடிவு செய்து கொள்ளலாம்.

மில்துணிக்குத் தடை:- சர்க்கார் அறிக்கையில் பாரா. 2. & 3.

ஆரம்பத்தில் கதர் திட்டத்தை சர்க்கா சங்கம் தயாரித்தது என்பது சரியல்ல. அந்த திட்டம் 18 மாதங்களில் 27 பிர்க்காக்களில் சுயதேவை பூர்த்தி அடைவதற்காக சென்னை சர்க்காரினாலேயே தயாரிக்கப்பட்டது. இம்மாதிரி திட்டம் நிச்சயமாக தோற்றுவிடும் என்று சர்க்கா சங்கம் அறிந்ததும் முக்கிய மந்திரியிடம் அணுகிற்று. அதன் பயனாக சர்க்கா சங்கத்துடன் கலந்து ஆலோசித்து திட்டத்தின் பிர்க்காக்கள் ஏழாக குறைக்கப்பட்டன.

"மில்துணி பகிஷ்காரத்தை சர்க்கா சங்கமே வற்புறுத்தவில்லை" என்று மந்திரி கூறியதை எங்கள் அறிக்கையில் பெரும் பாகத்தில் ஆக்ஷேபித்துக் கூறினோம். திட்டம் தயாரிக்கும் பொழுது ஏற்பட்ட சர்ச்சையில் ஸ்ரீ ஜாஜுஜி சொன்னதை எடுத்துக் காட்டியதைத் தவிர இப்பொழுது சர்க்கார் விடுத்துள்ள அறிக்கையில் நாங்கள் விடுத்த அறிக்கைக்கு ஒரு வார்த்தைகூட வேறு பதில் சொல்லவில்லை. "அதற்கு பிறகு (ஸ்ரீ ஜாஜுஜி 4 வருஷத்திற்கு முன்னால் சொன்ன பிறகு) ஒன்றுமே நடைபெறவில்லை." என்று சர்க்கார் சொல்வது சரியா? சர்க்கார் மில் தடை திட்டத்தை பின்னர் கைவிட்டது ஒன்றுமில்லையா? 1947-ல் நான்கு ஸ்தலங்களில் மில் துணியைத் தடை செய்ய முடிவு செய்தது ஒன்றுமில்லையா? கதருக்கு சாதகமாக நூற்பு நெசவு மில்களை ஆரம்பத்தில் சர்க்கார் கட்டுப்படுத்தும் கொள்கையை வெளியிட்ட பொழுது சர்க்காருடன், சர்க்கா சங்கம் ஒத்துழைக்க ஆரம்பித்தது. சர்க்கார்

அந்தக் கொள்கையை கைவிட்ட பொழுது தீவிர கதர் ஸ்தலங்களில் மில் துணியையாவது தடைசெய்ய வேண்டு மென்று சர்க்கா சங்கம் வற்புறுத்தியது. 7 கதர் ஸ்தலங்களில் நான்கில் மட்டும் தடை செய்வதாக சர்க்கார் ஒப்புக் கொண்டார்கள். பிறகு இரண்டு வருஷ காலம் வரை அதை அமுலுக்குக் கொண்டுவராமல் தள்ளிப் போட்ட துடன் கடைசியில் மறுத்தும் விட்டார் கள். இதையெல்லாம் முன் அறிக்கை யில் நாங்கள் குறிப்பிட்டோம். மேலும் நாங்கள் கூறியதாவது "சர்க்கார் சில விஷயங்களைச் செய்யலாம் அல்லது செய்யாமலிருக்கலாம். சர்க்கார் உறுதி யாக ஏற்றுக்கொண்டதை நிறைவேற்ரு மல் நான்கு வருடங்களுக்கு முன் ஜாஜுஜி வேறு சந்தர்ப்பத்தில் சொன் னதை சமாதானமாக சொல்வது எப் படி நியாயமாகும்?" மந்திரி விடுத்த தவறுதலான அறிக்கையை நேராக வாபீஸ் செய்வதற்குப் பதிலாக வேறு பல காரணங்களைக் கொண்டு சர்க்கா சங்கத்தைக் குறை கூற முன் வந்துள் ளார். இது, வாதத்தில் தங்கள் கட்சி பலஹீனமாயிருக்கும் பொழுது எதிர் கட்சியை வைது சம்பந்தப் படாத விஷயங்களை கிளப்பி குழப்ப முண்டாக்கும் சாமர்த்தியமான முறையை நமக்கு ஞாபகம் ஊட்டு கிறது.

கதர் ஸ்தலங்களில் மில் துணி தடையைப் பற்றி ஜனங்களின் கோரிக்கை ஒன்றுமில்லை என்று சர்க் கார் சொல்லுகிருர்கள். சர்க்கார் இந்த விஷயத்தில் முன்னே போக தயா ராக இல்லாததினுல்தான் அம்மாதிரி செய்வதில் ஜனங்களுக்கும் சிரத்தை இல்லாதது இயற்கையே. ஆனுல் ஒரு சமயத்தில் கனம் மந்திரி ஸ்ரீ பக்தவத் ஸலம் அவர்களின் தலைமையின் கீழ் அவனுசியில் நடந்த சென்டர் கமிட்டி யின் கூட்டத்தில் மில்துணியை தடை செய்ய வேண்டுமென்று செய்த தீர் மானம் பொதுக்கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்த வட்டாரத் தில்கூட ஏன் சர்க்கார் ஒன்றும் நட வடிக்கை எடுக்கவில்லை?

வேலையில் சர்க்கா சங்கத்தின் அசிரத்தை.

சர்க்காரின் அறிக்கையில் 4, 5-வது பாராக்களில் பலதவறுதலான விஷயங் கள் இருக்கின்றன. ஒழிந்த நேரத்தில் நூற்ருல் மில்துணியைவிட குறைந்த விலைக்கு ஒரு குடும்பத்திற்கு கதர் கிடைக்கும் என்று சொல்வது சரியல்ல. தானுக பட்டைப்போட்டுக் கொண்டா லும், பஞ்சின் விலையும், நெசவு கூலியுமே மில்துணியின் விலைக்குக் குறைவாக இருக்க முடியாது. அத ஞல்தான் கெஜத்திற்கு 0-4-0 மான் யம் கொடுக்கலாமென்று திட்டத்தில் சேர்க்கப்பட்டது. ஆனுல் சுய தேவைக்கு இதுகூட தூண்டுதலாக இராது.

கதர் வட்டாரத்திலே உற்பத்தியாகும் கதர் அங்கு செலவாகாமல் குவிந்து கொண்டிருக்கும் பொழுது ராட்டை களை அதிகப்படுத்துவதினுல் என்ன உப யோகம்?

இது வரையிலும் திட்டம் தோல்வி யடைந்து விட்டது என்று சர்க்கார் ஒப்புக் கொள்வது ஒரு விசேஷம். கொஞ்ச காலத்திற்கு முன்னுல் வரை திட்டம் முன்னேறிக் கொண்டு வருவ தாக சொல்லி வந்தார்கள். ஆனுல் திட் டம் முன்னேற வில்லை என்றும் முக்கிய

மாக மில் துணி சம்பந்தமாக தடை ஏற்படாத வரையிலும் திட்டம் நிறைவேறாது என்றும் சர்க்கா சங்கம் சொல்லிவந்தது. இப்பொழுது ஏற்பட்ட சர்ச்சை இது விஷயமாகத்தான். திட்டம் தங்களுடையதென்பதையும் எல்லா ஊழியர்களும் தங்கள் கீழ் நேரில் வேலை செய்து வந்ததையும் எளிதாக மறந்து விட்டு, திட்டம் தோற்றதற்கு பழியை சர்க்கா சங்கத்தின் மீது போடுகிறார்கள். ஊழியர்கள் திருப்தியாக வேலை செய்யாவிட்டால் சர்க்கார் அவர்களை நீக்கி இப்பொழுது செய்துள்ள மாறுதல்களை ஏன் முன்னமே செய்திருக்கக்கூடாது? சர்க்கா சங்கத்தை சர்க்கார் குறை கூறுவது நியாயமல்ல; ஆதாரமற்றது. சர்க்கா சங்கம் என்ன செய்தது என்றும் என்ன செய்ய முடியவில்லை என்றும் அதன் நிலைமையை சங்கம் இப்பொழுதும் கூறமுடியும். எங்கள் வேலையை திருப்திகரமாக செய்தோம் என்று உறுதியாகக் கூறுகிறோம். ஆனால் சர்க்காரைப் பற்றிய குறைகள் ஏராளமாகஇருக்கின்றன. இவைகளை விபரமாகச் சொல்லி இந்த அறிக்கையை பெரிதாக்குவதில் என்ன பயன்? வட்டாரத்திலும், கிராமத்திலும் கதர் கமிட்டிகள் சரியாக வேலை செய்யாததற்காக சர்க்கா சங்கத்தை எப்படி குறை கூறுவது? திட்டத்தில் உள்ள விசேஷ சிரமங்களையும், கிராம சூழ் நிலையைச் சரியாக தெரிந்து கொள்ளாமலும் அசிரத்தையாகவும் சர்க்கார் இருந்து விட்டதால்தான் நாங்கள் ஒன்றும் இதைவிட அதிகமாக செய்ய முடியவில்லை என்று அழுத்தமாகக் கூறுகிறோம்.

திட்டத்தின் நடை முறையில் உள்ள பல குறைகளை சர்க்காரின் கவனத்திற்கு சர்க்கா சங்கம் அடிக்கடி கொண்டு வந்தது. 26-8-49ல் கடைசியாக சர்க்காருக்கு சர்க்கா சங்கம் எழுதியதாவது "இந்த திட்டத்தை மந்திரி சபையின் திட்டமாக சர்க்கார் கருதவில்லை எனத் தெரிகிறது; கதர் ஸ்தலங்களில் அவசியமான சூழ் நிலையை ஏற்படுத்த மந்திரிகள் முயற்சிக்க வில்லை. திட்டம் ஆரம்பித்த பின் மந்திரி மூலமாகவோ, மேல் அதிகாரிகள் மூலமாகவோ பிரசாரம் என்ற பெயரில் ஒன்றும் நடைபெறவில்லை. அதனால் ஜில்லாவிலும், அந்த வட்டாரத்திலும் உள்ள அதிகாரிகள், போதுமான ஊக்கம் காட்டவில்லை. சர்க்கார் கஜானாவிலிருந்து பணம் வந்ததைத் தவிர சர்க்காருடைய கதர் வேலை என்று ஜனங்களின் கண்ணில் படவில்லை."

இதை எல்லாம் செய்வதற்கு சர்க்கா சங்கம் பொருப்பாளி என்று இப்பொழுது சர்க்கார் சுலபமாக கூறிவிடலாம். 28-2-48 வயில் மில் துணி தடையை வற்புறுத்தி நாங்கள் எழுதிய கடிதத்திற்கு நிலைமை நன்றாய் அறிந்த முக்கிய மந்திரி 11-3-48ல் கீழ்கண்டவாறு எமக்கு எழுதினார்:-

"பிரசாரம் சம்பந்தமாக, வட்டார கௌரவ அதிகாரிகளுடன் கலந்து கதர் ஸ்தலங்களில் தீவிரமாக பிரசாரம் செய்வதற்கு திட்டங்களை தயாரித்தனுப்பும்படி மாகாண ஜவுளி கமிஷனருக்கு எழுதியுள்ளேன். அவரிடமிருந்து அவை வந்த பிறகு பிரசார விஷயமாக தகுந்த நடவடிக்கைகள் சர்க்கார் எடுத்துக் கொள்ளுவார்கள்."

மேலும் எங்கள் கடிதத்தில் நாங்கள் கூறியதாவது:- "கூடுமான அளவு குறுகிய காலத்திற்குள் திட்டத்திற்கு வெற்றி கிடைக்கும்படி எல்லா அவசியமான

முயற்சிகளும் செய்யாமல், பணத்தை மட்டும் செலவழித்து கொண்டுபோனல் எல்லாம் இறுதியில் வீணகப் போய் விடும். சர்க்கா சங்கத்தின் கீர்த்தியும் பாதிக்கப்படும். சர்க்காரினல் சரியான சூழ்நிலைமை ஏற்படுத்தப் படாவிட்டால் திட்டம் வெற்றியடையாது.

"இம் மாதிரி திட்டத்தை நடத்திக் கொண்டு போவதில் சர்க்கா சங்கம் பங்கு எடுத்துக் கொள்ளலாமா என்பது யோசிக்க வேண்டியிருக்கிறது. எல்லா மந்திரிகளும் தீவிர கதர் திட்டத்திற்கு சம்பந்தமான அதிகாரிகளும் பிரசாரம் செய்வதற்கு ஆழ்ந்த சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்........"

நடந்ததை ஒன்றும் கூருமல் செய்யாததை மட்டும் சர்க்கார் கூறியிருக்கிறுர்கள். எவ்வளவோ கஷ்டங்களுக் கிடையில் சுயதேவை அபிவிருத்திக்காக தங்களால் இயன்றதை ஊழியர்கள் செய்திருக்கிறுர்கள். கொடுத்த ராட்டைகளைக் கொண்டு அல்ல; ஆனல் ஸ்தலத்திலே எவ்வளவு கதர் செலவாயிற்று? எவ்வளவுபேர் தங்கள் நூலை சுயதேவைக்கு உபயோகித்தார்கள் என்பதே திட்டத்தின் வளர்ச்சியின் அளவுகோல் ஆகும். வருஷா வருஷம் அபிவிருத்தியைக் காண்பிக்கக் கூடிய பூரா புள்ளி விபரங்களும் எங்களிடம் இல்லை. எல்லாம் சர்க்காரிடம் இருக்கிறது. எங்களுக்கு கிடைத்த சில புள்ளி விபரங்களை மட்டும் கீழே தருகிறேம். சர்க்கா சங்கத்தை கண்டிக்கப் புகும் சர்க்காருக்கு இந்த புள்ளி விபரங்கள் அல்பமாகத் தோன்றலாம். ஆனல் சுயதேவை தத்துவத்தை அறிந்து கொள்ள முடியாத படிப்பில்லாத எளிய மக்களிடம் சுயதேவை திட்டத்தை பெரிய அளவில் பரப்பும் கஷ்டங்களை உணரும் கதர் அன்பர்கள் இதைப் பாராட்டுவது நிச்சயம்.

ஆரம்பம் முதற்கொண்டு 30—6—1949 வரையில் 7 கதர் வட்டாரங்களிலும் 21 லட்ச ரூபாய்க்கு கதர் உற்பத்தியாயிற்று. அது கீழ்கண்டபடி செலவாயிற்று.

அ. வட்டாரத்தில்	விற்பனை	சுமார் ரூ.	7	லட்சம். =	சுமார் 33%
ஆ. சர்க்கா சங்கத்திற்கு	,,	,,	$2\frac{1}{2}$	,, =	,, $12\frac{1}{2}$%
இ. சர்க்கார் இலாக்காவுக்கு	,,	,,	4	,, =	,, 20%
ஈ. கையிருப்பு ஸ்டாக்	,,	,,	$7\frac{1}{2}$	,, =	,, $37\frac{1}{2}$%

தமிழ்நாட்டில் உள்ள அவுஞசி, வெள்ளக்கோவில் வட்டாரங்களில் நூல் உற்பத்தியும், அதில் கதருக்காக நூற்போர்களிடமிருந்து வாங்கிய டெபாசிட்டும் கீழ்கண்டவாறு:-

வருஷம்	நூல் உற்பத்தி சிட்டம்	டெபாசிட் சிட்டம்	சதம்
1947-48	4,06,000	29,100	7%
1948-49	3,72,000	1,07,400	29%

மேல் இரண்டு வட்டாரங்களிலும் நூற்போர்களுக்கும் நெய்வோர்களுக்கும் விற்ற கதர் பின் வருமாறு:-

வருஷம்	உற்பத்தி	விற்பனை	சதம்
1947–48	ரூ. 6,19,000	ரூ. 1,38,000	சுமார் 22%
1948–49	ரூ. 6,65,000	ரூ. 2,37,000	„ 35%

ஆந்திராவின் 3 வட்டாரங்களில் சுயதேவைக்காக நெய்த கதர் கெஜத்தில் கீழ்கண்டவாறு:-

வருஷம்.	மாதம்	கெஜம்	மாதம் சராசரி
1—1–1947 முதல் 31–12–1947 வரை	12 மாதம்	1,64,695	13,725
1—1–1948 முதல் 30—6–1948 வரை	6 மாதம்	34,693	5,782
1—7–1948 முதல் 30—6–1949 வரை	12 மாதம்	1,78,037	14,836
1—7–1949 முதல் 31—3–1950 வரை	9 மாதம்	1,28,637	14,293

குறிப்பு:- பின்வருஷங்களில் சர்க்கா சங்கத்தின் யோசனைப்படி மான்யத்தின் விகிதம் சர்க்காரால் குறைக்கப்பட்டது.

சர்க்கார் கதர் ஸ்டாக்:-

சர்க்கார் அறிக்கை: பாரா 6:-

சர்க்கா சங்கத்தின் கோரிக்கைப் படியும் சங்கத்தின் நன்மைக்காகவும் சர்க்கார், சங்கத்திற்கு கதர் கொடுத்ததாக குற்றம் சாட்டப்படுகிறது. இது உண்மைக்குப் பொருத்தமல்ல. கதர் வட்டாரத்திற்கு வெளியிலே கதரை விற்க சுலபமான வழி ஏற்பட்டால் சுயதேவை லக்ஷியத்திலிருந்து சர்க்காரின் கவனமும் நழுவிவிடும் என்ற எண்ணத்தினால் சர்க்காரின் கதரை சர்க்கா சங்கம் வாங்க விரும்பவில்லை. ஆனால் தங்களுடைய கதரை வாங்கி உதவி செய்யும்படி சங்கத்தைப் பலமுறை தூண்டியதை நிரூபிக்க எங்களிடம் போதுமான ரிக்கார்டு இருக்கிறது. அவைகளில் 2 மட்டும் கீழே குறிப்பிட்டால் போதுமானது.

10–7–'47-ல் நடந்த மகாநாட்டைப் பற்றிய சர்க்கார் அறிக்கையின் ஒரு பாகம் பின் வருமாறு:- "'சர்க்கார் ஒரு வியாபார ஸ்தாபனமல்ல என்றும், வெகுகாலமாக வியாபாரத்துறையில் வேலை செய்துவருவதால் சர்க்கா சங்கம் மிகுதியான கதர் ஸ்டாக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று' முதன் மந்திரி கூறினார். 'சர்க்கார் கதர் வேலையை தங்களுடையதாகவே எண்ணினால் சர்க்கா சங்கம் தன்னுடைய அனுபவத்துடன் சர்க்காருக்கு உதவி செய்யும் என்றும் ஆனால் கதர் வேலை சர்க்காருடையது அல்ல; சர்க்கா சங்கத்தை சேர்ந்ததுதான் என்றும் சர்க்

கார் எண்ணினால் சங்கம் இது சம்பந்தமாக ஒரு பொறுப்பையும் எடுத்துக் கொள்ளாது' என்றும் சர்க்கா சங்கத்தின் நிலைமையை ஸ்ரீ ஜாஜூஜி விளக்கினார்."

சர்க்காரின் காரியதரிசி 4-10-49உ சர்க்கா சங்கத்திற்கு எழுதிய கடிதத்திலிருந்து கீழ்கண்ட பாகம் பல விஷயங்களை விளக்கும்.

"சர்க்கா சங்கத்தின் பிரதிநிதி வற்புறுத்தியபடி நான்கு தீவிர கதர் வட்டாரங்களில் கொடுக்கப்பட்ட மில் துணி வியாபாரம் லைசென்சுகளை ரத்து செய்ய புனராலோசனை செய்யவும், மேற்படி நான்கு வட்டாரங்களில் உற்பத்தியாகும் மில் நூல் கைத்தறித் துணியை அவ்விடங்களில் விற்பனை செய்வதை தடுத்து, விற்பனைக்கு வெளியே கொண்டு போவதற்கு சட்டம் ஏற்படுத்துவதற்கும் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். தீவிர கதர் வட்டாரங்களில் உற்பத்தியாகும் கதரில் உபரி இருந்தால் சர்க்கார் இலாக்காக்களுக்கு கூடுமான வரை எடுத்துக் கொள்ள முயற்சி செய்யப்படும். லைசென்ஸ் (கதர் வியாபாரிகளுக்கு) கொடுக்கும் விஷயமாக ஆந்திர தேசத்தில் மட்டும் உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளருக்கும் லைசென்ஸுகள் கொடுக்கப்பட்டன. சர்க்கா சங்கம் தங்கள் கதர் வேலையை விஸ்தரித்துக்கொள்ளும் ஸ்தலங்களில் லைசென்ஸ்தாரர்களுக்கு அவசியமான முன் எச்சரிக்கை செய்துவிட்டு கொடுத்த லைசென்ஸ் ரத்து செய்யப்படும் என்றுதெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ் நாட்டில் லைசென்ஸ் கொடுக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலைமையில் சர்க்காரின் தீவிர கதர் வட்டாரங்களில் இப்பொழுது தேங்கிக் கிடக்கும் கதர் ஸ்டாக்கில் பெரிய அளவு கூடிய சீக்கிரம் எடுத்துக்கொள்ளும்படி சர்க்கா சங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறேன்."

"இந்த நிலையில்," "கூடியசீக்கிரம்" என்ற வார்த்தைகள் விசேஷ அர்த்தம் உடையவை.

பின்னால் நடந்ததை கவனிக்கும் பொழுது இது விஷயமாக சர்க்கார் தங்களுடைய மனதில் முன்னாலேயே முடிவு செய்துவிட்டதாக ஏற்படுகிறது. புனராலோசனை செய்வதாக கொடுத்த வாக்கு தங்களிடமுள்ள கதர் ஸ்டாக்கை எடுத்துக் கொள்ள சங்கத்தை சிக்க வைக்க ஒரு தூண்டுதல்போல் தோன்றவில்லையா? சர்க்காரின் கதரினால் சங்கத்திற்கு லாபமேற்பட்டது என்று சூசகமாக கூறுவது ஆதாரமற்ற பழியாகும். சர்க்கார் கதர் வேலையில் $3\frac{1}{8}$% கமிஷன் கொடுத்த போதிலும் போக்குவரத்து செலவைத் தவிர சர்க்கா சங்க விலையில் விற்றதில் மற்ற செலவிற்கு 3% க்கு குறைவாகத்தான் கிடைத்தது. ஆதலால் சர்க்கா சங்கத்திற்கு இதில் நஷ்டமே ஏற்பட்டது. கதர் திட்டத்தின் ஆரம்பத்தில் சர்க்கா சங்க கிளைகளில் இருந்த ஸ்டாக்கின் பெயரில் சர்க்காருக்கு கொடுத்த $3\frac{1}{8}$% கமிஷனேதான் திரும்ப சர்க்கா சங்கத்திற்கும் கொடுக்கப்பட்டது. மாகாண ஜவுளி கமிஷனர் 19-7-47 உ மெமோ No. R. C. No. 122419/K/47ல் கண்டதாவது:-

"சர்க்காருக்கு சர்க்கா சங்கத்தின் ஸ்டாக் மாற்றியபொழுது என்ன நிபந்தனைகள் இருந்தனவோ அதே

நிபந்தனையின்பேரில், அதாவது உற்பத்தி மதிப்புடன் 3⅛% சேர்த்து சர்க்கார் ஸ்டாக்கை சர்க்கா சங்கத்திற்கு கொடுத்துவிட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது"

சென்டர்களை வாபீஸ் செய்தல்.

சர்க்கார் அறிக்கை பாரா 7 :

சர்க்கா சங்கத்தை வியாபார ரீதியில் இருப்பதாக சர்க்கார் சுட்டிக்காட்டு கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு முன்னால் சுயதேவை ஆதாரத்தின்பேரில் இந்த ஸ்தலங்களில் வேலை செய்ததாக சர்க்கா சங்கம் ஒருபொழுதும் கூறவில்லை. சர்க்கா சங்கத்தின் பொதுவான வேலை முறையைபற்றி சர்க்காருக்கு தெரியாமலிருக்கலாம். சென்ற 5 வருஷங்களாக சுயதேவை லக்ஷியத்திற்காக சர்க்கா சங்கம் விசேஷ முயற்சி செய்து வருகிற தென்றும் ஆகையினால் வியாபார கதர் வேலையை அத்தாட்சி பெற்ற ஸ்தாபனங்களுக்கு மாற்றி வருவதையும் கதரன்பர்கள் நன்கு அறிவார்கள். தவிர, உண்மையில், சர்க்கா சங்கம் தன்னுடைய வியாபார கதர் வேலையை தீவிரமாகப் பரப்பாதது தவறுதல் என்று பலர் சங்கத்தை குறைகூறுகிறார்கள்.

1946 செப்டம்பர் மாதம் சர்க்கா சங்கத்தின் மாகாணக் காரியதரிசிகள் முக்கிய மந்திரியுடன் பேசியதில் சர்க்கா சங்க ஸ்தலங்கள் சர்க்கா சங்கத்திற்கு இப்பொழுது ஏற்பட்ட நிலைமையில் திருப்பிக்கொடுப்பதைப்பற்றி சொன்ன கூடமான உறுதியைபற்றி எங்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டதை சர்க்கார் மறுக்கவில்லை. இந்த ஸ்தலங்களை திருப்பிக் கொடுக்க சர்க்கார் மறுப்பது தர்ம ரீதியாக நியாயமில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் நமக்கு கிடைத்த பல அனுபவத்தைப்போல இதுவும் பழைய வழியில் செய்யும் ஒரு எதேச்சாதிகார முறையாகும். அரசாங்கங்கள் எப்பொழுதும் சர்வ ஆதிக்கமுடையது. "மன்னன் தவறே செய்யமுடியாது." என்பது பழமொழி.

அத்தாட்சி பத்திரம் பெறாத வியாபாரிகளிடத்தில் தாக்ஷிண்யம்:-

சர்க்கார் அறிக்கை பாரா 8:-

அத்தாட்சிப் பத்திரம் பெறாத கதர் வியாபாரிகளிடத்தில் சர்க்கார் தயை காட்டியதை நிரூபிக்க எங்களிடம் போதுமான அத்தாக்ஷி இருக்கிறது. 1949-ம் வருஷம் பின்பாதியிலும் அதற்குப் பிறகும் எடுத்த நடவடிக்கைகளைப்பற்றி மட்டும்தான் சர்க்கார் அறிக்கை கூறுகிறது. ஆனால் நாங்கள் கூறுவது அதற்கு முந்திய காலம் சம்பந்தமானது. 2—10—1946-ல் ஆரம்பித்த திட்டத்திலேயே அத்தாட்சிப் பத்திரம் பெறாத வியாபாரிகளை நீக்க ஒரு நிபந்தனை இருந்தது. 1949 வரையிலும் சர்க்கார் ஏன் நடவடிக்கைகள் எடுக்கவில்லை? இந்த தாமதத்திற்கு காரணங்கள் அவர்கள் கூறியிருக்க வேண்டும்.

(கதர் வியாபாரிகளுக்கு) லைசன்ஸ் கொடுக்கும் பிரச்னையை எழுப்பி ஆந்திர தேசத்திலுள்ள தனிப்பட்ட கதர் உற்பத்தி விற்பனை செய்பவர்களுக்கு லைசன்ஸ் கொடுக்க சர்க்கா சங்கம் சம்மதித்ததாக சர்க்கார் கூறுகிறார்கள். ஆந்திராவில் மட்டும் கதர் லைசன்ஸ் தாரிகள் 199 என்றும் இது ஒரு சிறிய எண்ணிக்கை என்றும் கூறப்படுகிறது. அகில இந்தியாவிலும் சர்க்கா சங்கத்தின் அத்தாட்சி பத்திரம் பெற்றவர்கள் 127 மட்டுமே இருக்க ஆந்திராவில் உள்ள லைசன்ஸ்தாரிகள் எப்படி சிறிய எண்ணிக்கையாகும்? லைசன்ஸ் விஷயமாக தீர்மானித்த கமிட்டியின் முதல் கூட்டத்தில் மற்ற பலருடன் எங்கள் ஆந்திர கிளை காரியதரிசி இருந்தது வாஸ்தவம். சர்க்காரின் வட்டார கதர் ஆபீஸர் என்ற முறையில் தனக்கு வந்த சொந்த அழைப்பு கடிதத்தின்பேரில் அக்கூட்

டத்தில் கலந்து கொண்டதாகவும் சர்க்கா சங்கத்தின் காரியதரிசியாக கமிட்டியில் கலந்து கொள்ளவில்லை யென்றும் அங்கிருந்த ஆபீஸர்களிடம் தெளிவாக அவர் சொன்னார். இருந்தாலும், அவர் பெயரில் தவறுதல் என்று தான் நாங்கள் கருதுகிறோம். இது நாங்கள் அறிந்தவுடன் சர்க்காரின் முறை தவறு என்று அவர்களுக்கு தெளிவாக்கினோம். நாங்கள் எழுதியதற்கு சர்க்கார் அனுப்பிய பதிலிலிருந்து ஒரு பாகம் மேலே குறிப்பிட்டோம். இம் மாதிரியான நிலைமையில் தமிழ்நாடு சம்பந்தமாக தமிழ்நாட்டுக் கிளையின் காரிய தரிசி சர்க்காரின் முறையை ஆக்ஷேபித்ததினால் அங்கு ஒரு லைசன்ஸும் கொடுக்கப்படவில்லை.

ஆனால் இந்த விஷயத்தில் சென்னை சர்க்காரைவிட காங்கிரஸ் நிர்வாக கமிட்டியைத்தான் குறை சொல்ல வேண்டுமென்று தோன்றுகிறது. கதர் வியாபாரிகளுக்கு அத்தாட்சிப் பத்திரம் கொடுக்க மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் அதிகாரம் கொடுத்து காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இதனால் அறியாமலேயே கதரின் தூய்மைக்கும் கதர் தத்துவத்திற்கும் தீமை விளைவித்தது. இருந்தாலும் அதிர்ஷ்டவசமாக சென்னை ராஜ்யத்தைத் தவிர வேறு மாகாண காங்கிரஸ் கமிட்டியோ ராஜ்யமோ அத்தாட்சி பத்திரம் கொடுக்கவில்லை. அதற்கு மாறாக ஒரிஸா, மத்ய பாரதம், பஞ்சாப், அஸாம் ராஜ்யங்கள் கதரின் தூய்மைக்கும் அதன் அபிவிருத்திக்கும் சர்க்கா சங்கத்தின் அத்தாட்சி பத்திரத்துடன் வேலை செய்வதே தகுந்த முறை என்று உணர்ந்து அப்படியே செய்து வருகிறார்கள். தங்களுடைய தீர்மானத்தை அமுலுக்கு கொண்டு வருவதினால் கதருக்கு ஏற்படும் தீமைகளை உணர்ந்து காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி பின்னால் இந்த விஷயத்தில் மேற்கொண்டு ஒன்றும் செய்யாமல் நின்றுவிட்டார்கள் என்று யூகிக்கிறோம்.

சர்க்காரின் தீர்மானத்தை வரவேற்கிறோம்.

சர்க்கார் அறிக்கை:- பாரா 9.

சர்க்காரின் துணித் தேவைக்கு கதரை உபயோகிப்பது என்று 1947-ல் செய்த முடிவிற்கு சர்க்காருக்கு நன்றி செலுத்துகிறோம். இதுவிஷயமாக எவ்வளவு தூரம் நடைமுறையில் செய்து வருகிறார்கள் என்பதைப் பொது ஜனங்கள் அறிய விரும்புவார்கள். இருந்தாலும் தீவிர கதர் வட்டாரங்களில் உள்ள உபரி கதர் ஸ்டாக்கை உபயோகப்படுத்துவதற்கும் இந்த தீர்மானத்துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லையா என்ற கேள்வி எழலாம். கதர் திட்டத்தை, அதாவது தீவிர சுயதேவை திட்டத்தை நடத்த சர்க்கார் முடிவு செய்ததைப் பற்றி சந்தோஷமடைகிறோம். சர்க்கார் இதில் வெற்றி அடைந்தால் சர்க்கா சங்கத்தைவிட அதிகமாக சந்தோஷப்படக்கூடியவர்கள் வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள். திட்டத்தின் அபிவிருத்தியை எல்லா கதர் அன்பர்களும் சிரத்தையுடன் கவனித்து வருவார்கள். திட்டம் வெற்றியடைய விரும்புகிறோம்.

[ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பு]

வாலிபர்களுக்கு அழைப்பு.

ஸ்ரீ. தீரேந்திர மஜும்தார்.

அக்கிராசனர், அகில பாரத சர்க்கா சங்கம்.

இன்று தேசம் முழுதும் வாலிபர்கள் கலக்கமடைந்திருக்கிறார்கள். "சுதந்திரம் கிடைத்துவிட்டது; ஆனால் இது எப்படிப்பட்ட சுதந்திரம்"? என்று அவர்கள் கேட்கிறார்கள். இதைவிட ஆங்கில ஆட்சியே நன்றாக இருந்தது என்று தேசமக்களும் சொல்லுகிறார்கள். நாலா பக்கமும் அதிருப்தியே காட்சியளிக்கிறது. இந்த நிலைமையில் தேசத்திலுள்ள வாலிபர்கள் குழப்ப மடைந்திருப்பது இயற்கையே. ஆனால் குழப்ப மடைவதால் ஆகக்கூடியது என்ன? தேசத்தின் நிலைமை கெட்டுவிட்டதென்றால் அதை சீர்திருத்துவது யார்? எந்த தேசத்தையும் நாசத்திலிருந்து காப்பாற்றும் பொறுப்பு வாலிபர்களைச் சார்ந்தது. ஆகையால் பாரத தேசத்திலுள்ள வாலிபர்கள் இன்றைய நிலைமையைப் பற்றி நன்றாக சிந்திக்க வேண்டும்.

தேசத்தில் ஜனவரி 26-உ யும் ஆகஸ்டு 15-உ யும் சுதந்திர தினமாக கொண்டாடப்படுகிறது. மற்ற பண்டிகைகளைப்போல வீடுகளில் எல்லாம் இந்த உத்ஸவங்களையும் கொண்டாடுவார்கள். ஜனவரி 26-உயும், ஆகஸ்டு 15-உயும் சுதந்திரம் கிடைத்த வீடுகளில் சந்தேகமில்லாமல் கொண்டாடப்பட்டன! எல்லாவற்றையும் விட டில்லியில் அதிக ஆடம்பரமாகவும், மற்ற மாகாணத் தலைநகரங்களில் வெகு விமரிசையாகவும் சுதந்திரத்தை கொண்டாடியது எல்லோருக்கும் தெரியும். ஆனால் கிராமக் குடியானவர்கள், தொழிலாளிகள், நகரங்களிலுள்ள சாதாரண மக்கள், இவர்களிடம் சுதந்திர தினத்தில் ஒரு வித உற்சாகத்தையும் பார்த்திருக்க முடியாது. இதிலிருந்து, இந்த சுதந்திரம் மக்களின் சுதந்திரமாக இல்லாமல் ஒரு சுதந்திரதேசமாகமட்டும் ஆகிவிட்டது என்பது வெளிப்படுகிறது.

ஆகையால், வாலிபர்கள், எப்படி இந்த சுதந்திர தேசத்தை சுதந்திர ராஜ்யமாக்கமுடியும், அதாவது ஜனங்களுடைய உண்மையான ராஜ்யத்தை எப்படி ஸ்தாபிக்க முடியும் என்பதைப்பற்றி சிந்திக்கவேண்டும். 30 வருஷம் முன்னால் தேசம் ஆங்கிலேயர்களின் கீழ் அடிமையில் சிக்குண்டிருக்கும்போது சில மிராசுதார்களும், பணக்காரர்களும் அதிகாரத்தை கைப்பற்ற எண்ணியிருந்ததை காந்திஜி கண்டார். பிறகு மக்களின் அஹிம்சைப் போரால் மக்களிடையே விழிப்பை தூண்ட வேண்டியதாயிற்று. இந்த வேலை மக்களிடையே அனுபவமில்லாத மிராசுதார்களின் தலைமையில் நடைபெற முடியாது. இதற்கு மத்திய வர்க்கத்தின் தலைமை தேவையாக இருந்தது. மத்திய வர்க்கத்திற்கு மக்களிடையே தொடர்பு இருந்ததால் ஜனங்களில் விழிப்பை உண்டாக்க சுலபமாக முடிந்தது. இதற்காக அவர்கள் பழைய மிராசுதார் வர்க்கத்திலுள்ள பல தலைவர்களை மத்திய வர்க்கத்தினராக மாறும்படி செய்தார்கள். ஆகையால் அவர்கள் மக்களிடையே தொடர்புவைத்து மக்களின் அஹிம்சை யுத்தத்தின் தலைமை தாங்க சாத்தியமாயிற்று.

தேசம் பூராவும் மக்கள் விழித்தெழுந்தனர். உலக யுத்தத்தின் பயனாக உலகத்தின் நிலைமை மாறியது. இதன் பல

ஞக ஆங்கிலேயர்களும் போய்விட்டார்கள். யாரிடம் தலைமை இருந்ததோ அவர்களே அதிகாரத்தை ஏற்ருர்கள். நகரங்களில் இன்று அவர்களுடைய ராஜ்யமே காட்சி யளிக்கிறது.

ஆங்கில ஆட்சியின் காரணமாக மக்களை சுரண்டுவதற்கும், அடக்கியாளவும் ஏற்பட்ட அரசியலின், பொருளாதார, சமூக முறைகளை வேருடன் மாற்றி யமைக்க காந்திஜி விரும்பினர். ஆனல் துரதிர்ஷ்டவசமாக அந்த முறை அப்படியே இன்றும் இருந்து கொண்டேயிருக்கிறது. அதிகாரம் மட்டும் ஆங்கிலேயர்களிடமிருந்து மாறி பாரத தேசத்தின் மத்திய வர்க்கத் தலைவர்களின் கைக்கு வந்து விட்டது. நிர்வாகத்திற்கும், அதிகாரத்திற்கும், பழய உத்யோக முறையும் தேவையை பூர்த்தி செய்ய முதலாளித்துவ முறையும் அப்படியே இருந்து விட்டது. எந்த முறையால் மக்கள் சுரண்டப்பட்டும், அடக்கப்பட்டும் வந்தார்களோ, அந்த முறையை மாற்ருமல், வெறும் நிர்வாக யுக்திகளால் மட்டும் மக்கள் நிலைமை மாருது. அத்துடன் மக்கள் தங்கள் சுயராஜ்யத்தை நிர்மாணிக்க முடியாது. இதனலேயேதான் நாலாபக்கமும் ஒரே குழப்பக் காட்சியளிக்கிறது.

30 வருஷங்களுக்குமுன், ஆங்கிலேயர்களை பாரத தேசத்திலிருந்து வெளியேற்றும் பொறுப்பு வாலிபர்களுக்கு எவ்வளவு இருந்ததோ அதே போன்று சுதந்திர ராஜ்யத்தை, மக்களின் ராஜ்யமாக மாற்றி அமைக்கும் பொறுப்பு வாலிபர்களைச் சார்ந்ததே. இதற்காக தனது இறுதி காலத்தில் காந்திஜி தேசத்திலுள்ள 7 லட்சம் வாலிபர்கள் தேவை என்று அறைகூவி அழைத்தார். முப்பது வருஷங்கள் முன்னல் காந்திஜியின் அழைப்பின் பேரில் தேசத்திலுள்ள வாலிபர்கள் வந்தார்கள்; ஆங்கில ராஜ்யத்தை பகிஷ்கரிக்கும் சண்டையைத் தொடுத்தார்கள். இன்றும் அப்படியே லக்ஷக்கணக்கான வாலிபர்கள் தங்கள் நடைமுறை வாழ்க்கையை விட்டு விட்டு காந்திஜி உபதேசித்த புரட்சியில் தங்களை அர்ப்பணம் செய்ய வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் வகுப்புவாதம், கோஷ்டி வாதம் அல்லது, சர்வாதிகார வாதத்தின் கையில் நாட்டை வீழ்த்தி விட்ட பழி அவர்களைத்தான் சேரும்.

உழைப்பாளிகளின் தலைமை.

எம்மாதிரி அந்த சமயத்தில் மக்களை விழித்தெழுப்ப மிராசுதாரர்களின் தலைமையை மாற்றி மத்திய வர்க்கத்தினரின் தலைமை தேவையிருந்ததோ அதே போன்று இன்று மக்களின் இயக்கம் அல்லது புரட்சிக்காக மத்திய வர்க்கத்தினரின் தலைமையை மாற்றி உழைப்பாளிகளின் தலைமையை நிலைநாட்ட வேண்டும். இக்காரணத்தினல்தான் காந்திஜி 7 லட்ச வாலிபர்களிடம் முதன் முதலில் தங்கள் வர்க்கத்தை விட்டு தொழிலாளி வர்க்கத்தில் சேரும்படி சொன்னர். பிறகு கிராம தொழிலாளிகளையும், குடியானவர்களையும் சுய தேவைப்பூர்த்தி செய்பவர்களாகமாற்றி அவர்களில் உயர்ந்த வர்க்கத்திற்கு சேவை செய்வதிலிருந்து விடுபடும் சக்தியை உண்டாக்கும் வழியையும் நம்முன் வைத்தார். யுக யுகங்களாக மக்கள் இந்த மிராசுதார் அல்லது பணக்காரவர்க்கத்தினரால், சமூகத்தின் தேவைப் பூர்த்தி என்ற சாக்கிலோ அல்லது மக்களின்நன்மை என்ற காரணத்திஞலோ சுரண்டப்பட்டும், அடக்கப்பட்டும் வருகிருர்கள். இதன் காரணம் என்ன? தொழில் செய்து சம்பாதிப்

பவர்கள் தங்கள் சாமான்ய வாழ்க்கைக்காக பெரும்பாலும் எவரையாவது அண்டி சேவை செய்ய வேண்டியிருப்பதே இதற்கு ஒரே ஒரு காரணம். இரண்டு பூனைகளிடையே அவர்களின் ரொட்டியை பங்கிட மத்தியஸ்த குரங்கின் அவசியம் ஏற்படும் வரையில், பூனைகளின் தராசுத்தட்டில் ரொட்டி மிஞ்சுவது எப்படி? இந்த சனாதன சத்யத்தை உதாரணமாக நினைத்து, தாங்கள் மக்களின் உண்மை சுயராஜ்யத்தை நிலை நாட்ட வேண்டுமென்றால் காந்திஜி சொன்ன புரட்சியில் ஈடுபட்டு உலகத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கும் குவியல்-நிர்வாக-சர்வாதிகார- அரசியலை எதிர்த்துப் பரவல் முறையில் சுயதேவையை அடிப்படையாகக் கொண்ட மக்கள் அரசை ஸ்தாபிக்க வேண்டியிருக்கும். இதற்காக, பொருளாதார குவியல் (முதலாளித்துவ) முறைக்குப் பதிலாக உழைப்பையும், சமூக வேற்றுமைகளை ஒழித்து பொருளாதார ஜனநாயகத்தையும் நிறுவும் புரட்சியை ஏற்படுத்துவோம்.

இந்த வேலைக்காக லக்ஷக்கணக்கான வாலிபர்கள் புரட்சிப் பொறிகளாக மாறி கிராமம் கிராமமாகப் பரவ வேண்டும். முதலாளித்துவ குவியல் முறை பிடிப்பிலிருந்து மக்களை விடுவிக்கும் வேலையில் வாலிபர்கள் ஈடுபட வேண்டும்.

கதாயிமண்டல் இயக்கம்.

இந்த வேலை எப்படியிருக்கலாம், வாலிபர்களின் திட்டம் எப்படியிருக்க வேண்டும் என்பதே இப்பொழுது பிரச்சனை. அகில பாரத சர்க்கா சங்கம் தேசம் பூராவும் கதாயிமண்டல்களை அமைத்து இந்த புதிய புரட்சிப் பாதையில் ஒரு உறுதியான முன்னடி வைத்திருக்கிறது. தேசத்திலுள்ள வாலிபர்கள் தேசத்தின் நிலைமையை சம்பீரமாக சிந்தித்து, ஆயிரக்கணக்காக எங்களுடன் வந்து சேரும்படி நாங்கள் வேண்டுகிறோம். "விதேச ராஜ்யத்திற்கு" பதிலாக சுதந்திர ராஜ்யத்தை ஸ்தாபிக்க தேசத்திலுள்ள எவ்வளவு வாலிபர்கள் குண்டிற்கு பலியானார்கள்! உயிரை தியாகம் செய்தார்கள்! இன்றைய வாலிபர்கள் சுதேச ராஜ்யத்திற்கு பதிலாக மக்களின் உண்மையான ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிக்க லட்சக்கணக்கான கிராமங்களில் தங்கள் வாழ்க்கையை விட்டு, உயிரை அர்ப்பணம் செய்ய வாலிபர்களை முன்வர அழைக்கின்றோம்.

தமிழ் நாட்டில்
ஸர்வோதய மேளா.
1951 பிப்ரவரி 12-உ

ஸ்ரீரங்கம்.

சென்ற வருஷம் பிப்ரவரி 12-உ ஸ்ரீரங்கத்தில் காவேரிக் கரையிலுள்ள அம்பாள் மண்டபத்தில் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தியின் தலைமையில் ஸர்வோதயமேளா நடந்தது. அதேபோல் அங்கு இவ்வருஷமும் 12-உ காலை $7\frac{1}{2}$ மணி முதல் 10 மணி வரை மேளா நடந்தது. திருச்சி ஸ்ரீரங்க வாசிகள் 60 பேர்களும், தஞ்சையிலிருந்து சர்க்கார் ஆதாரக்கல்வி பெண்கள் ஆசிரியர் பயிற்சி வித்தியாலயத்தின் 85 மாணவிகளும் 5 ஆசிரியர்களும் நூற்பு யக்ஞத்திலும் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார்கள். ஆக மொத்தம் நூற்றவர்கள்

சுமார் 150 பேர்கள். நூல் காணிக்கை யாக 436 சிட்டங்கள் நேரிலும், பிரதி நிதிகள் மூலமாகவும், தபால் மூலமாக வும் கிடைத்தன. சர்வோதயக் கருத் துக்களைப் பற்றி ஆச்சாரியா விநோபாஜி எழுதிய 3 கட்டுரைகள் படிக்கப்பட்டு பிரார்த்தனையுடன் மேளா முடி வடைந்தது.

தனுஷ்கோடி.

காந்திஜி பக்தர்கள், கதரன்பர்களின் கோஷ்டி ஒன்று சஞ்சாலக் ஸ்ரீ A. சுப்பு ராயலு தலைமையின் கீழ் 11-2-51-ல இரவு 12 மணிக்கு தனுஷ்கோடிக்கு புறப்பட்டது. விநோபாஜி கதாயி மண்டல் அங்கத்தினர்களான ஸ்ரீ P. N. K. சுப்புராம், A. S. ராமுடு அய்யர். A. S. அருணாசலம். T. K. பெரியசாமிநாடார். M. M. ரெங் காச்சாரியும், பெரியகுளம், பரமக்குடி கதரன்பர்களும், சர்க்கா சங்க நிர்வாகி களும் மற்றும் இராமநாதபுரம் சர்க்கார் ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சி தலைமை ஆசிரியரும், பயிற்சி ஆசிரியர்கள் 70 பேர்களும் கலந்து கொண்டார்கள். 12—2—51-ல காலை 8 மணிக்கு தனுஷ் கோடி காங்கிரஸ் கமிட்டி ஏற்பாட்டின் பேரில் மேளா கோஷ்டியார் காந்திஜி உருவப்படத்துடன் முக்கிய தெருக் களின் வழியாக ஊர்வலம் சுற்றி காந்தி ஜியின் அஸ்திகரைக்கப்பட்ட கடற் கரைக்குப் போய் சேர்ந்தார்கள். ஸமுத்திர ஸ்நானத்திற்கு பிறகு காந்திஜி யின் உருவப்படத்திற்கு முன்பாக 8-45 மணிக்கு நூற்புயக்ஞம் நடை பெற்றது. ராட்டையிலும், தக்ளியிலும் 102 பேர்கள் நூற்றார்கள். 2 நிமிடம் மௌனமாக இருந்தபின் ராம் துன் பாடப்பட்டது. காலைப் பிரார்த்தனை ஸ்லோகங்களும் காந்திஜியின் பொன் மொழிகளும் வாசிக்கப்பட்டன. ஆதாரக்கல்வி பயிற்சி தலைமை ஆசிரியர் அவர்கள் அஹிம்ஸை—சத்தியம் பற்றி சுருக்கமாக எடுத்துரைத்தார்கள். யக் ஞத்தின் போது அன்பர்கள் காணிக்கை யாக 27 சிட்டங்கள் செலுத்தினர்கள்.

சிற்றுண்டிக்குப்பின் மேளா கோஷ்டி யினர் ராமேஸ்வரத்திற்கு திரும்பி வந்து சேர்ந்தார்கள். ராமேஸ்வர காங்கிரஸ் கமிட்டியின் சார்பிலும் பிரபல காந்திய பக்தர்களும், ராமேஸ்வர தேவஸ்தான அதிகாரிகளும், கோவில் தேவஸ்தான யானை, குதிரை முதலிய விருதுகளுடன் மேளா கோஷ்டியினரை வரவேற்றூர் கள். கோவில் பரிவாரங்களுடனும் மேளதாளத்துடனும் காந்திஜியின் உரு வப்படத்துடன் சர்க்கா ஊர்வலம் பல முக்கிய தெருக்களைச்சுற்றி கோவில் சன்னிதானத்தை அடைந்தது. இடை வேளைக்குப்பின் மாலை 3-40 மணிக்கு கல்யாணமண்டபத்தில் நூற்புயக்ஞமும் பிரார்த்தனையும் நடைபெற்றன.

இத்துடன் மேளா முடிவுற்றது.

சென்னை.

12-2-'51 சர்வோதய மேளாவன்று பிற்பகல் சுமார் 3 மணிக்கு சென்னை காதி விபாகத்திலிருந்து அலங்கரிக்கப் பட்ட இரட்டை மாட்டு வண்டியில் காந்திஜியின்படத்துடன் ஊர்வலம் புறப் பட்டது. அதில் சுயதேவையாளர்கள், நூற்போர்கள், கதாயிமண்டல் அங்கத் தினர்கள் முதலானோர் கலந்து கொண் டனர். காந்திஜி பஜனை பாடல்களுடன் சென்டரல்—வாலாஜாரோட் ஆகிய முக்கிய ரஸ்தாக்களின் வழியாக சென்னை கடற்கரையில் காந்திஜியின் அஸ்திகரைத்த இடத்திற்கு மாலை சுமார் 5-15 மணிக்கு ஊர்வலம் வந்தடைந்தது.

தக்கர்பாபா வித்யாலய மாணவர்களும் ஊர்வலமாக வந்து கலந்து கொண்டார்கள்.

மேளாவிற்கென அமைக்கப்பட்ட பந்தலின் முன்பாக மேளா கூடிற்று. ஆண்கள், பெண்களுமாக சுமார் 300 பேர்கள் கலந்து கொண்டார்கள்.

வேள்வி நூற்புக்குப்பின் மேளாவைப்பற்றிய வினேபாஜியின் ஹிந்தி சொற்பொழிவும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பும் படிக்கப்பட்டது. மேளாவிற்கு வந்து கூடியிருந்த கதரன்பர்களால் நூல்காணிக்கை அளிக்கப்பட்டது. மொத்தம் காணிக்கை 545 சிட்டங்கள். அதில் சென்னை சர்க்கார் வெல்லிங்டன் சீமாட்டி குஷ்ட நிவாரண ஆரோக்கிய நிலைய கத்தாயிமண்டலின் சார்பாக 190 சிட்டங்களும், சென்னை தக்கர் பாபா வித்தியாலய மாணவர்களால் அளிக்கப்பட்ட 102 சிட்டங்களும் குறிப்பிடத்தக்கவை.

நூல் காணிக்கை அளிப்புக்குப்பின் ஸ்ரீனிவாச காந்திநிலையத்தைச் சார்ந்த பெண் தொண்டர்களால் காந்தி ஆஸ்ரம பிரார்த்தனைப் பாடல்களுடன் இரவு 7-30 மணிக்கு மேளா முடிவுற்றது.

பேரூர். (கோவை)

பக்தர்கள் காந்திஜியின் படத்தை புஷ்பங்களால் அலங்கரித்து பஜனை கோஷ்டியுடன் ஊர்கோலமாக பேரூர் சென்றார்கள். அவ்விடம் காலை 10 மணிக்கு கொடி வணக்கம் நடத்தப்பட்டது. பிற்பாடு காந்தி ஞாபகார்த்த ஸ்தூபி திறப்பு விழா நடைபெற்று அதில் ஸ்ரீ P. S. ரங்கசாமியும், ராமகிருஷ்ண வித்யாலயம் ஸ்ரீ அருணசலமும் காந்திஜியின் நிர்மாணத் திட்டங்களை பற்றியும் கதர் சுயதேவைத்திட்டங்களை பற்றியும் பேசினார்கள். அன்று காலை 11-15 மணிக்கு நூற்பு யக்ஞம் நடைபெற்றது. அதில் ராட்டை நூற்பவர்கள் சுமார் 200 பேர்களும், தக்ளி நூற்பவர்கள் பள்ளிக்கூட மாணவ, மாணவிகள், உபாத்தியாயினிகள் 100பேர்களும் கலந்து கொண்டார்கள். நூற்பு முடிவடைந்ததும் 15 நிமிஷம் பிரார்த்தனை நடைபெற்று அத்துடன் மேளா முடிவடைந்தது. ஷை மேளாவில் ராமகிருஷ்ண வித்யாலயம் மாணவர்களும் கலந்து கொண்டார்கள். காணிக்கை நூல் 154 சிட்டம் கொடுத்தார்கள். சுமார் 500 பேருக்கு மேல் கதர் அன்பர்களும் நிர்மாண ஊழியர்களும் இருந்தார்கள். அன்று மாலை 5 முதல் 6-மணி வரை பிரார்த்தனை கீதங்கள் பாடப்பட்டன. இரவு பேரூர் கோவில் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பஜனை, பிரார்த்தனை நூற்பு யக்ஞம் ஆற்றங்கரையில் நடந்தது.

ஸர்வோதய கிராம யாத்திரை.

அருந்தவபுரம் (தஞ்சை ஜில்லா)

நிர்மாண ஊழியர்கள் கிராமத்தில் அலைந்து யாத்திரை செய்வதன் மூலமாக கிராமத்தில் செய்ய வேண்டிய வேலையைப்பற்றி அவர்களுக்கு அறிவும் சக்தியும் கிடைக்கும் என்று ஆச்சார்யா வினேபாஜி கூறியுள்ளார். காந்திஜி பிறந்த தினம், சர்க்கா ஜயந்தியும், இறந்த தினம்–ஸர்வோதய தினமும் தொண்டர்கள் கிராம யாத்திரை செய்து ஸர்வோதய தத்துவப்படி சேவை செய்ய புனித காலமாகும். ஸர்வோதய தினத்

திற்கு 2 தினங்கள் முன்னல் தஞ்சை ஜில்லாவில் 17 தொண்டர்கள் சேர்ந்து 6 கிராமத்தில் கால் நடையாக யாத்திரை செய்தார்கள். இவர்களில் சர்க்கா சங்கத் தொண்டர்கள் 5 பேர், கதாயி மண்டல்களிலிருந்து 5 பேர்கள், மற்ற வர்கள் 7 பேர்கள். 2-வது தினத்தில் வேறு 8 பேர்களும் சேர்ந்து கொண்டார்கள். 28வ காலை அம்மாப்பேட்டைக்கு பக்கத்திலுள்ள அருந்தவபுரம் என்றகிராமத்தில்யாத்திரை ஆரம்பித்தது. காலை மூவர்கோட்டைக்கும், மாலை வடுவூருக்கும், 29 வ மூர்த்தியம்பாள்புரம், பழைய கோட்டை, கம்பர்நத்தம் கிராமங்களுக்கு நடந்து போனர்கள். 30வ ஸர்வோதய தினம் அருந்தவ புரத்தில் கொண்டாடப்பட்டது.

போன கிராமங்களில் பொதுத் துப்புரவும், நூற்பு யக்ஞமும், பிரார்த்தனையும் நடந்தது. கதர் சுயதேவைக்கு பஞ்சுப் பட்டை போட துனுயி முறையும், மூங்கில் ராட்டையில் நூற்பும் செய்து காண்பிக்கப்பட்டன. ஸர்வோதய தினத்தை பற்றியும், ஸர்வோதய பொருளாதாரம்—ஸர்வோதய சமாஜம் முதலியவைகளைப் பற்றியும் சில இடங்களில் சர்ச்சை நடந்தது. இந்த யாத்திரைக்கு வேண்டிய முயற்சி எடுத்து, கதர்மலர் ஆசிரியரையும் கலந்துகொள்ள சந்தர்ப்பமளித்த அருந்தவபுரம் ஸ்ரீ மருதையா தேவர் அவர்களுக்கு எமது நன்றி.

இந்த யாத்திரையில் கலந்துகொண்டவர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

ஸ்ரீமான்கள் எஸ். மருதையா தேவர், அருந்தவபுரம். ஆர். கோவிந்தசாமி செட்டியார், பட்டுக்கோட்டை. சுப்பாரமன், கொட்டவாசல் மண்டல். ஆர். காசிநாதன், தம்பிக்கோட்டை கதாயி மண்டல். ஆர். சுப்பையன், தம்பிக்கோட்டை கதாயி மண்டல். டாக்டர் என். ஆர். விஸ்வநாதய்யர்—மாயவரம். சுந்தரேசம் பிள்ளை, ஆலங்குடி. ருத்திராபதி, அலவந்திபுரம். துரைசாமி மழவராயர்—மருவத்தூர். சுவாமி லக்ஷ்மீகாந்தா—திருத்துரைப்பூண்டி, வடுகூர் கதாயி மண்டல். ஹரிசாமி, தஞ்சை. எம். எஸ். ஸ்ரீனிவாசன், தஞ்சை. ஆர். கண்ணன், தஞ்சை. எம். நடராஜன், தஞ்சை. கலியப்பெருமாள், மாரியம்மன் கோவில். டி. கே. ஸ்ரீனிவாசன்—தஞ்சை. என். ராமஸ்வாமி, A. I. S. A. திருப்பூர்.

வடுவூரில் சேர்ந்துகொண்டவர்கள்.

ஸ்ரீமான்கள் எ. வி. வெங்கட்ராமன் A. I. S. A. தஞ்சை விபாக் சஞ்சாலக். எம். எஸ். எம். ஷெரீப், ஆக்கூர். பெரிய தம்பி மழவாரயர், அத்திவெட்டி. உலகையா தேவர், அருந்தவபுரம் - ராமகிருஷ்ணன். டி. எஸ். விரசேகரன், திருக்களர் கதாயி மண்டல். எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாபநாசம். கெ. வெங்கட்ராமய்யர், மணக்காடு.

மூலனூர் வட்டாரம் (கோவை.)

இந்த யாத்திரை 31-1-'51-வ மாலை ஆரம்பித்து 12-2-'51-வ மாலையுடன் முடிவடைந்தது. தொண்டர்கள் தினசரி இரண்டு கிராமங்களுக்குச் சென்று துப்புரவு, நூற்பு வேள்வி, சமூகப் பிரார்த்தனை முதலியவை நடத்தினர்கள். இரவில் பொதுக் கூட்டங்கள் கூட்டி கீழ்க்கண்ட விஷயங்கள் விளக்கப் பட்டன.

1. உடை சுயதேவைப் பூர்த்தி. 2. செயற்கை உரம் தயாரித்தல். 3. கிராமத்துப்புரவு. 4. கிராமக்கைத் தொழில் பொருள்களை உபயோகித்தல்

5. காப்பி, தேத்தண்ணீர் முதலிய பானங்களை அருந்தாமலிருத்தல்.

நூற்பு வேள்வியில் தொண்டர்கள் பருத்தியிலிருந்து ஈரிழை முறுக்கும் வரையிலுள்ள எல்லா தொழில்களையும் செய்து காட்டினார்கள்.

கதர் சுயதேவைப் பூர்த்தியாளர்கள் குறைந்த செலவில் தங்களுக்கு வேண்டிய நூற்புக் கருவிகளை வாங்கிக் கொள்ளலாம், அல்லது தாங்களே தயாரித்துக் கொள்ள முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு பருத்தி அறைப்பதற்கு, பலகைமணை, இரும்புக்குழவி, பஞ்சுடைப்பதற்கு சிறிய மூங்கில் வில், நூற்பதற்கு மூங்கில் ராட்டை முதலிய கருவிகள் உபயோகப்படுத்தப் பட்டன. நூற்போர்களும், கதர் சுயதேவைப் பூர்த்தியாளர்களும் தங்களுக்கு வேண்டிய பட்டைப் பஞ்சிற்காக பிறரை எதிர் பார்த்திருக்க வேண்டியதில்லை. தாங்களே தயாரித்துக் கொள்ள முடியும் என்பதை காட்டுவதற்காக சிறிய மூங்கில் வில்லால் பஞ்சு கொட்டி காண்பிக்கப்பட்டது. நூற்பு வேள்வி நடந்து கொண்டிருக்கும் பொழுதே ஒரு தொண்டர் நூற்புக்கருவிகளின் உபயோகத்தைப் பற்றியும், ஓய்வு நேரத்தில் நூற்றாலே தங்களுக்கு வேண்டிய உடைகளுக்கு நூற்றுக் கொள்ள முடியும் என்பதைப் பற்றியும், நூற்போரிடத்தில் ஜீவனத்திற்காக நூற்கக் கூடாது, தங்கள் ஆடைக்காகத்தான் நூற்க வேண்டுமென்றும் விளக்கிக் கூறினார். நூற்போர் மூங்கில் ராட்டையில் நூற்றுப்பார்த்து நூற்பதற்கு வசதியாக இருக்கிறதென்று தெரிவித்தார்கள். நூற்பு வேள்வி ஒரு சிறிய கண்காட்சியைப் போன்று இருந்தது.

ஈரிழை முறுக்கு, துப்பட்டா ஸ்டாண்டு மூலமும் மூங்கில் ஈரிழை ராட்டு மூலமும் செய்து காண்பிக்கப் பட்டது. யாத்திரை காலத்தில் நடந்த வேள்வியில் மொத்தம் $8\frac{1}{2}$ ஈரிழைச் சிட்டங்கள் தயாராகின. தொண்டர்கள் தங்களுக்கு வேண்டிய உணவை கிராமங்களில் தங்கி சமையல் செய்து கொண்டார்கள்.

மொத்தம் யாத்திரை சென்ற கிராமங்களின் எண் இருபத்திநான்கு.

பிரயாணம் செய்த தூரம் ஐம்பது மைல்கள்.

யாத்திரையில் கலந்து கொண்ட தொண்டர்களின் எண் பதினொன்று.

—சி. துரைராஜன்.
17—2—'51

★ ★ ★

ஸர்வோதய தினம்:- காந்திஜி தன்னை ஒரு சாதாரண மனிதராகவே கருதி வந்தார். நாமும் அவரை அப்படியே கருதுவோம். அதில் பெருமை இருக்கிறது. அன்று ஒரு புனிதமான நாமம் உச்சரிக்க வேண்டுமானால், ஏன் அவர் கடைசியாக அவர்பேரில் குண்டு பாய்ந்தவுடன் இயற்கையாக பக்தியுடன் அவர் வாய்விட்டு வந்த நாமத்தையே வைத்துக் கொள்ளலாகாது? ஆகையால் நான் அவர் சிரார்த்த தினத்தை 'ஸர்வோதய தினம்' என்று அழைப்பேன்.

—வினோபாஜி.

தமிழ் நாட்டில் ஸர்வோதய தினம்.

1951 ஜனவரி 30.

மஹாத்மா காந்தி இறந்த ஜனவரி-மீ 30-உ. ஸர்வோதய தினமாக தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் கொண்டாடப்பட்டது. சர்க்கா சங்கத்தின் அக்ராசனர் திரேந்திர மஜும்தார் உணர்ச்சியும் சிந்தனையும் தூண்டும்படி விடுத்த அறிக்கையில் கூறிய 3 திட்டங்களும் அதாவது துப்புரவு, யக்ஞம், பிரார்த்தனை எல்லா இடங்களிலும் நிறைவேற்றப்பட்டன. அன்று மாலை 4 மணி முதல் 4¾ வரையிலும் ஒரே சமயத்தில் தமிழ் நாடெங்கும் பல இடங்களில் நூற்பு யக்ஞம் நடத்தி 5 மணிக்கு பிரார்த்தனை நடந்தது. ஒரே சமயத்தில் தேசமெங்கும் இம்மாதிரி சிறு கூட்டங்களாகவோ, பெரிய கூட்டங்களாகவோ சேர்ந்து கர்மத்திலும் பக்தியிலும் ஈடுபட்டது மக்களின் உற்பத்தி சக்தியையும் ஆத்ம சக்தியையும் எழுப்ப உதவி செய்திருக்கும். சர்க்கா சங்கத்தின் வஸ்திராலயங்களும், கதாயிமண்டல்களும் காங்கிரஸ் கமிட்டிகளும் இதர ஸ்தல ஸ்தாபனங்களும் ஒன்று சேர்ந்து யக்ஞத்தையும் பிரார்த்தனையும் நடத்தினர்கள்.

யக்ஞத்தில் ராட்டையிலும் தக்ளியிலும் நூற்றவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காக இருக்கக்கூடும். விபரமான அறிக்கைகள் இன்னும் கிடைக்கவில்லை. யக்ஞத்தில் கலந்து கொண்டவர்கள் சுமார் 50,000 இருக்கக்கூடுமென்று நம்புகிறோம்.

ஸர்வோதய தினத்தில் பலர் உபவாசமிருந்தார்கள். பல கோஷ்டிகள் துப்புரவு செய்தனர். ஹரிஜனங்கள் வசிக்குமிடத்தில் விசேஷ துப்புரவு நடந்திருக்கிறது. குழந்தைகளுக்கு தின்பண்டங்களும், மருந்தும் சில இடங்களில் கொடுக்கப்பட்டது. கல்வி, சுகாதாரம் பற்றி பிரசாரம் நடந்தது. காந்திய ஸர்வோதய தத்துவங்களைப்பற்றி பல இடங்களில் உபன்யாசம் நடந்தது. இம்மாதிரி பலமுறையில் இந்த புனித தினம் கொண்டாடப்பட்டது என்று அறிகிறோம். பிரார்த்தனையில் ஏராளமான பொதுஜனங்கள் கலந்து கொண்டிருப்பார்கள். எல்லாவற்றையும் விட நூற்பு யக்ஞம், மௌன நூற்பு யக்ஞம் மகத்துவமுடையதால் யக்ஞம் நடந்த இடங்களும் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையும் கீழே தரப்படுகிறது.

திருப்பூர்:- அகில பாரதசர்க்கா சங்கத்தின் எல்லா தொண்டர்களும் அதிகாலையில் பிரார்த்தனைக்குப் பிறகு ஒரு மணி நேரம் துப்புரவு செய்தார்கள். 2 மணிநேரம் நடந்த நூற்பு யக்ஞத்தில் சுமார் 300 ஊழியர்கள் கலந்து கொண்டனர். மாலை 3 மணிக்கு கதர் கலை கண்காட்சிக்குப் பின்னர் திரு சுப்பிரமணிய உயர்நிலைப்பள்ளியில் நூற்பு யக்ஞமும் பிரார்த்தனையும் நடைபெற்றது.

3-வது சர்வோதய சம்மேளனம்:- ஹைதராபாத்திற்கு அருகில் சிபாம்பள்ளி கிராமத்தில் ஏப்ரல் மீ 8, 9, 10, 11 உ களில் நடைபெறும்.

தமிழ் நாட்டில் ஸர்வோதய தினம்.

ஜனவரி 30-உ. நூற்பு யக்ஞம்.

ராட்டையிலும் தக்ளியிலும் யக்ஞத்தில் நூற்றவர்கள்.

கோவை ஜில்லா.	எண்.
திருப்பூர்—காந்திநகர்	410
சுண்டப்பாளையம்	7
கல்பட்டி	5
சாமக்குளம்	9
குறிச்சி	12
நாதகவுண்டன் புதூர்	14
இடிகரை	30
கோவை டவுன்	76
தாராபுரம் டவுன்	10
ஈரோடு	55
கோபி	147
புதுப்பாளையம்	68
செம்மங்காளிபாளையம்	83
அகிலாண்டபுரம்	77
வரதப்பன்பாளையம்	78
கள்ளமேடு	70
ஆலம்பாடி	92
செடங்காளிபாளையம்	59
சேமலைவலசு	74
குள்ளியம்புதூர்	54
கவுண்டம்பாளையம்	60
ராசிபாளையம்	115
சிவகிரி	103
கொடுவாய்	286
குண்டடம்	287
ப்வானி	50
கொடுமுடி	20
மூலனூர்	140
நம்பியூர்	73
ஒட்டபாளையம்	109
செட்டிபாளையம்	98
	2771

	எண்.
	2771
தைலாம்பாளையம்	96
வரப்பாளையம்	54
படியூர் பிர்க்கா	250
புஞ்சை புளியம்பட்டி புதுப்பாளையம்	32
உடுமலைப்பேட்டை	25
ஊத்துக்குளி	155
குன்னத்தூர்	303
	3686

திருச்சி ஜில்லா.	
கரூர்	175
திருச்சி டவுன்	150
தேனூர்	60
தொழுதூர் பிர்க்கா	110
செந்துறை	6
	501

தென் ஆற்காடு ஜில்லா.	
சிதம்பரம்	761
திண்டிவனம்	31
விருதாசலம்	42
சின்னபரூர்	9
குடியாநத்தூர்	27
மங்களப்பட்டி	10
மணக்குப்பம்	12
திருப்பாப்புலியூர்	406
திருக்கோவிலூர்	5
	1303

வட ஆற்காடு ஜில்லா.	எண்.
திருவண்ணமலை	65
வேலூர் (ஜில்லாவிலும் டவுனிலும்)	1532
	1597

சேலம் ஜில்லா.	
ஆத்தூர்	35

நீலகிரி ஜில்லா.	
உதகமண்டலம்	23

மதுரை-ராமநாதபுரம் (விபாக்)	
மதுரை	2927
ஸ்ரீவில்லிப்புத்தூர்	1000
திண்டுக்கல்	100
பெரியகுளம்	74
பழனி	74
திருமங்கலம்	130
செ. புதுப்பட்டி	345
வடக்கம்பட்டி	150
பரமக்குடி	152
அருப்புக்கோட்டை	130
காரைக்குடி	150
பேரையூர்	309
மேலப்பட்டி	50
சுந்திரபாண்டியம்	300
புதுப்பட்டி	350
சிவகாசி	221
ராஜபாளையம்	760
முகவூர்	180
விருதுநகர்	60
சாத்தூர்	50
மம்சாபுரம்	250
	7762

தஞ்சாவூர் ஜில்லா (விபாக்)	எண்.
கும்பகோணம்	58
மாயவரம்	879
மன்னார்குடி	70
நாகபட்டினம்	150
அதிராம் பட்டிணம்	66
தஞ்சை	377
திருவாரூர்	100
திருவையாறு	75
பட்டுக்கோட்டை	23
பூவத்தக்குடி	189
அருந்தவபுரம்	76
	2003

திருநெல்வேலி ஜில்லா (விபாக்)	
கோவில்பட்டி டவுன்	398
ஆண்டியாபுரம்	22
காலாங்கரை பட்டி	343
கழுகுமலை	565
புதுப்பட்டி	506
சங்கரன்கோவில்	953
கரிவலவந்த நல்லூர்	113
புளியங்குடி	850
கீழப்பாவூர்	202
வீரவநல்லூர்	711
திசையன்விளை	872
திருநெல்வேலி	1620
தூத்துக்குடி டவுன்	216
திருச்செந்தூர்	153
ஏரல்	842
தென்காசி	370
அம்பாசமுத்திரம்	82
மைப்பாறை	60
	8878

கதாயி மண்டல்கள்.

தஞ்சை ஜில்லா.

	எண்.
நாகபட்டிணம்	20
அம்மையப்பன்	7
புஷ்பவனம்	20
துளஜாபுரம்	50
தம்பிக்கோட்டை	30
தர்மாபுரம்	78
கழுக்காணிமுத்தம்	108
களப்பாடி	37
திருக்களார்	37
வேதாரண்யம்	70
கொடவாசல்	41
மணக்காடு	30
	528

தென்னாற்காடு ஜில்லா.

பறங்கிப்பேட்டை	247
காட்டுமன்னார்குடி	160
புவனகிரி	233
பாளையங்கோட்டை	103
கீழமூங்கிலடி	106
சூரக்கோட்டை	64
குறிஞ்சிப்பாடி	70
	983

திருச்சி ஜில்லா.

	எண்.
மேட்டூர்	45
பூளாம்பட்டி	50
	95

திருநெல்வேலி ஜில்லா.

அம்பாசமுத்திரம்	6

கோவை ஜில்லா.

அலங்கியம்	7

வடஆற்காடு ஜில்லா

குடியாத்தம்	16
	1635

கோவை	ஜில்லா	3686
திருச்சி	,,	501
தென் ஆற்காடு	,,	1303
வட ஆற்காடு	,,	1597
சேலம்	,,	35
நீலகிரி	,,	23
மதுரை-ராமநாதபுரம்	,,	7762
தஞ்சாவூர்	,,	2003
திருநெல்வேலி	,,	8878
		25,788
கதாயி மண்டல்கள்		1,635
	மொத்தம்	27,423

குறிப்பு:- எங்களுக்கு கிடைத்த அறிக்கைகளின்படி நூற்றவர்களில் சுமார் 17,000 ராட்டையில் நூற்றார்கள். பொதுத்துப்புரவில் கலந்துகொண்டவர்களின் எண் 450. மாலை பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்கள் சுமார் 30,000 இருக்கும்.

குறிப்பும் செய்தியும்.

திக்கற்றவரின் பிதா:- தக்கர் பாபா.

திக்கற்றவர்களுக்கு பிதாவாக இருந்த தக்கர் பாபா 19—1—'51-ல வெள்ளிக்கிழமை மறைந்துவிட்டார். கோடிக்கணக்கான ஹரிஜனங்களுக்கும், தோட்டிகளுக்கும், மலைவாசிகளுக்கும் பிதாவாக விளங்கினர். 1869-ம் வருஷத்தில் பிறந்தார். இஞ்சினீராக சிறிது காலம் இந்தியாவிலும், ஆப்ரிக்காவிலும் வேலை செய்தார்; தன்னுடைய தொழிலை ராஜீநாமா செய்துவிட்டு பூரு நேரத்தையும் மக்களின் சேவைக்காக அர்ப்பணம் செய்தார். ஸர்வன்ட்ஸ் ஆப் இந்தியா சொசைட்டியில் சேர்ந்து அதன் மூலம் செய்த சேவைக்கு அளவில்லை. கடைசியாக ஸ்திரீகளின் சேவைக்காக கஸ்தூரிபா ஞாபகார்த்த சங்கத்திலும் காரியதரிசியாக இருந்தார். இறக்கும் வரையிலும் ஒவ்வொரு நிமிஷத்தையும் துக்கப்பட்டவரின் சேவைக்கே உபயோகித்தார். அவரிடத்திலிருந்த சேவா ஆற்றலும் திறமையும் நிர்மாண ஊழியர்களாகிய நமக்கு இருந்தால் காந்திய வழியில் சமூகப் பொருளாதாரப் புரட்சியை சுலபமாக ஏற்படுத்த முடியும். இந்தப் பெரியாருக்கு கடவுள் கொடுத்த சக்தியை நமக்கும் கொடுத்து அருள்வாராக!

அன்னை பீடர்சன்.

ஸ்ரீமதி அன்னி மேரியா பீடர்சன் டென்மார்க்கில் பிறந்தவர். தீனபந்து ஆண்ட்ரூசைப் போல காந்திஜியின் சிறந்த பக்தர். ஏசுநாதரின் உபதேசத்தை பின்பற்றி டேனிஷ் மிஷனில் சேர்ந்து இந்தியாவுக்கு 40 வருஷங்கள் முன்னல் வந்தார். பிறகு காந்திஜியின் உபதேசத்தைப் பின்பற்றி இந்திய தேசீய உணர்ச்சியை வளர்க்கும் சேவைக்காக பறங்கிப்பேட்டை பெண்களுக்கு சேவாமந்திரம் என்ற வித்யாலயம் 1921-ல் ஆரம்பித்தார். அதற்கு அஸ்திவாரக்கல்லை காந்திஜி நாட்டினர். சென்ற 30 வருஷகாலமாக காந்திஜியின் வழியில் குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் அரிய சேவை செய்து 'பெரியம்மாவாக' விளங்கினர். பிற்காலத்தில் டேனிஷ் மிஷனிலிருந்தும் உதவி நின்றுவிட்டது. சர்க்காருடைய உதவியும் இல்லை. பல கஷ்டங்களுக்கிடையில் சேவா மந்திரத்தை நடத்திவந்தார். அன்னை 73-வது வயதில் ஜனவரி-மீ 30ல ஆண்டவன் திருவடியை அடைந்து அவர் விருப்பப்படி அவர் உடல் நம் தேசத்தின் மண்ணுடன் கலந்துவிட்டது.

தேச - மத எல்லையைத்தாண்டி இந்தியாவிற்கு இவ்வளவு உயர்ந்த சேவைசெய்த டென்மார்க் அன்னையின் மரணம் எல்லோருக்கும் துக்கம் கொடுக்கும். அன்னையின் உயர்ந்த லக்ஷியமும், தன்னலமற்ற சேவையும் நிர்மாண ஊழியர்களுக்கு உயர்ந்த உதாரணமாக விளங்கும்.

சிதம்பரத்தில் நிர்மாண வேலை.

தென்னற்காடு ஜில்லாவில் நிர்மாண வேலைக்கு சிதம்பரம் முக்கிய ஸ்தலம். அங்கு நிர்மாண வேலையிலும் முக்கியமாக கதர் வேலையிலும் ஈடுபட்ட அன்பர்கள் பலர் இருக்கிறார்கள். சிதம்பரத்திற்கு பக்கத்தில் கீழமூங்கலடியில்

ஸ்ரீ ரா. விநாயகம் M. A., B. L., அவர்களின் தலைமையில் சென்ற ஐந்து, ஆறு ஆண்டுகளாக நடக்கும் காந்தி ஆசிரமம் பல துறையில் சேவை செய்துவருவது எல்லோரும் அறிந்ததே. அவருடைய தலைமையில் சுயதேவைக்கும் கிராம சேவைக்கும் பல பயிற்சி முகாம்கள் நடந்தன. அநேகர் பருத்தி அரைப்பது முதல் நெசவு வரையிலும் பயிற்சி பெற்றார்கள். இவைகளைப் பற்றி விபரமான அறிக்கை ஒன்றும் எங்களிடம் இல்லை. ஆனால் சென்ற 3 ஆண்டுகளாக நடந்துவரும் ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சி வித்யாலயத்தின் 3-ம் ஆண்டின் அறிக்கை சமீபத்தில் கிடைத்தது. அதன்படி 25-4-1950-உ யுடன் பூர்த்தியான வருஷத்தில் 69 பேர் பயிற்சி பெற்றனர். சென்ற வருஷத்தில் உற்பத்தியான நூல் சிட்டம் 3021; நெய்த கதர் 564 சதுரகெஜம். உற்பத்தியான உணவு தானியங்களும், காய்கறியும் 532 ரூபாய் பெறுமான முள்ளது. ஆசிரம மாணவர்களின் உழைப்பினால் தங்கள் உணவுத் தேவையையும் துணித் தேவையையும் ஓரளவு பூர்த்தி செய்து கொண்டது கல்வித் துறையில் ஏற்பட்ட காந்தீயப் புரட்சிக்கு அரிய சின்னமாக விளங்கும். தமிழ்நாட்டு ஆதாரக்கல்வி சங்கக் காரிய தரிசியின் இந்த 'காந்தி ஆசிரமம்' தென்னாற்காடு ஜில்லாவிற்கு ஆதாரக்கல்வி மூலம் கிராம விடுதலைக்கு புரட்சி ஸ்தலமாக விளங்கும் என்று நம்புகிறோம்.

மூன்றாவது ஸர்வோதய சம்மேளனம்.

ஸர்வோதய சமாஜத்தின் 3வது வருஷ சம்மேளனம் ஹைதராபாதுக்கு அருகில் சிவராம்பள்ளி என்ற கிராமத்தில் வரும் ஏப்ரல் 8 உ ஞாயிறு முதல் 11 உ புதன் வரையிலும் நடைபெறும். சென்ற வருஷம் அங்கூலில் நடந்த முறையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 7 நாட்களுக்குப் பதிலாக இந்த வருஷம் நான்கு நாட்களே சம்மேளனம் நடைபெறும். இதர தனிப்பட்ட நிர்மாண ஸ்தாபனங்களின் மகாநாடு நடைபெறாது. சம்மேளனத்திற்கு வரும் ஸர்வோதய ஊழியர்கள் தினம் சமையல், துப்புரவு, முகாமில் இதர வேலைகள் சேர்ந்து செய்ய வேண்டும். ஊழியர்கள் பரஸ்பரமாக சந்தித்து சர்ச்சை செய்யும் நேரம் போக தினம் 3 மணி நேரம் மட்டும் சம்மேளனத்திற்காக ஒதுக்கப்படும். ஏப்ரல் 8 உ காலையிலே சம்மேளனம் ஆரம்பமாகும்.

வரும் ஊழியர்கள் தங்களுடைய சொந்த படுக்கை, சாப்பாடு தட்டு, சொப்பு, டம்ளர், ராட்டை, பட்டைப் பஞ்சு முதலியவை கொண்டுவர வேண்டும். சாப்பாடு செலவிற்காக தினம் 1½ ரூபாய் வீதம் அல்லது நான்கு தினங்களுக்கும் மொத்தம் 5 ரூபாய் வசூலிக்கப்படும்.

ஹைதராபாத் ஸ்டேஷனிலிருந்து சிவராம்பள்ளி சுமார் 5 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கிருந்து சிவராம்பள்ளிக்கு பஸ் வசதி உண்டு. பஸ் சார்ஜ் சுமார் 6 அணா.

ஸர்வோதய ஊழியராகப் பதிவு செய்து கொண்டோருக்கு மட்டும் ஹிந்தியில் அழைப்புப் பத்திரம் வரும். அவர்கள் மட்டும்தான் சம்மேளனத்தில் கலந்து கொள்ளலாம். ஊழியர்களுக்கு ஹைதராபாத் போய்வர ரயில்வேயில் சலுகை ரயில்வே போர்டு அனுமதித்திருக்கிறது. வர்தா, ஸர்வோதய சமாஜ், காரியதரிசியின் அத்தாட்சி பத்திரம் இருந்தால்தான் சலுகையுடன் டிக்கெட் கிடைக்கும்.

ஸர்வோதய சம்மேளனத்தில் நூற்பு - நெசவுப் போட்டி.

சென்ற வருஷம்போல இவ்வருஷம் ஹைதராபாதுக்கு பக்கத்தில் ஏப்ரல்-மீ 8-வ நடக்கும் ஸர்வோதய சம்மேளனத்தில் நூற்பு, நெசவு போட்டி நடைபெறும். இப்போட்டிகளைப்பற்றி எல்லா விபரமும் சர்க்கா சங்கத்தின் தனி பிரசுரத்தில் காணப்படும். நான்குவித போட்டி நடைபெறும். (1) ராட்டையில் வேக நூற்பு. (2) தக்ளியில் வேக நூற்பு. (3) பருத்தியிலிருந்து சம்பூர்ண நூற்பு. (4) துபட்டா நெசவு. ஒவ்வொன்றிலும் 3 பரிசுகள் உண்டு. முதல் பரிசு 100 ரூபாய், 2-வது 75 ரூபாய், 3-வது 50 ரூபாய். போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்களுக்கு பக்கத்திலுள்ள சர்க்கா சங்க வஸ்திராலயத்தில் மார்ச்சு-மீ 10-வக்குள் பூர்வாங்கப்போட்டி நடைபெறும். அதில் குறிப்பிட்ட வேகமுள்ளவர்களுக்கு திருப்பூர் மாகாண காரியாலயத்தில் மார்ச்சு-மீ 20-வக்குள் இரண்டாவது பூர்வாங்க போட்டி நடக்கும். இதில் தேரியவர்கள் சம்மேளனத்திற்கு அனுப்பப்படுவார்கள். போட்டியில் கலந்துகொள்வோர் பிரயாண-சாப்பாடு செலவை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். போட்டியைப்பற்றிய பூரா விபரங்களுக்கு காரியதரிசி, சர்க்கா சங்கம், தமிழ்நாட்டுக் கிளை, திருப்பூர் என்ற விலாசத்திற்கு எழுதலாம்.

தமிழ்நாட்டில் ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார்.

சர்க்கா சங்க அக்கிராசனர் ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார் மார்ச்சு-மீ 8-வ முதல் 31-வ வரையிலும் தமிழ் நாட்டில் எல்லா விபாகங்களிலும் பிரசாரத்திற்காக சுற்றுப்பிரயாணம் செய்வார். அவருடைய பல கட்டுரைகளும், பிரசங்கங்களும் கதர் மலரில் அடிக்கடி வெளிவருகின்றன. 'ராட்டைப்புரட்சி,' சமீபத்தில் வெளியான 'ஸ்வராஜ்யமும் சர்க்காவும்,' என்ற அவரது இரு புஸ்தகங்களையும் படித்தவர்கள் அஹிம்சாப் புரட்சிக் கருத்தை நேரில் கேட்க ஆவலுடன் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி.

சர்க்கா சங்கக்காரியதரிசி ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி மங்களூர், பாலக்காடு விஜயம் செய்து பிப்ரவரி-மீ 19-வ திருப்பூர் வந்தார். 25, 26 தேதிகளில் திருப்பூரில் ஊழியர்களின் கூட்டம் நடந்தது. விபாக் சஞ்சாலகர்களும் இதரர்களும் வந்தார்கள். சர்க்கா சங்கத்தின் சுயதேவை லக்ஷியத்திற்காக விபாகங்களின் வேலை முறையைப்பற்றி சர்ச்சை நடந்தது. சங்கத்தின் கொள்கைகளையும் லக்ஷியத்தையும் விபாகின் நோக்கத்தையும் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி ஊழியர்களின் கூட்டத்தில் விளக்கினர்.

இடுவாய் கதாயி மண்டல் மகாநாடு.

இடுவாயில் சென்ற வருஷம் ஜனவரி 4-வ மாகாண கதாயி மண்டல் மகாநாடு ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தியின் தலைமையில் நடந்தது. அங்கு தறிகாரர்கள் ஒரு கதாயி மண்டல் ஆரம்பித்தார்கள். சுமார் 50 தறிகாரர்கள் இப்பொழுது நூற்கிறார்கள். சென்ற மகாநாடு நடந்த தினத்தில் (ஜனவரி 4-வ) பொதுத் துப்புரவு, கொடியேற்றம், நூற்பு

யக்ளும், பொதுக்கூட்டம் முதலிய வைகள், வீரபாண்டி உற்பத்தி வஸ்திராலய நிர்வாகி ஸ்ரீ S. சொக்கலிங்கம் தலைமையில் நடந்தது.

சர்க்கார் ஆதாரக் கல்வி போர்டு கூட்டம்.

1951 ஜனவரி 17, 18 உகளில் சென்னையில் ஆதாரக்கல்வி ஆலோசனை போர்டு கூட்டம் நடந்தது. ஆதாரக் கல்வியைத் தீவிரமாகவும், திறமையுடனும் பரப்புவதைப் பற்றி பல விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன.

திருத்தம்.

சென்ற ஜனவரி –பிப்ரவரி மாத கதர் மலர் 158-ம் பக்கத்தில் 3-வது பாராவில் ஸ்ரீ டி. கெ. ஸ்ரீனிவாசய்யர் கனுகாந்தி கோஷ்டியுடன் “1–12–50 முதல்” சுற்றுப்பிரயாணம் செய்தார் என்பதை “1–12–50உ மட்டும்” என்று மாற்றிக் கொள்ளக்கோருகிறோம்.

மலையாள காதி ஜகத்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் கேரள மாகாணக் கிளை மூலம் “காதி ஜகத்” என்ற மலையாள மாதப் பத்திரிக்கை 1951 ஜனவரி முதல் வெளியாகிறது. நல்ல கட்டுரைகளுடன் 18 பக்கம். விலை அணா 2. வருட சந்தா ரூ 1—8—0.

சர்க்கா சங்கத்தின் லக்ஷியத்தை விளக்கும் இப்பத்திரிக்கையை மலையாளம் தெரிந்த அன்பர்கள் ஆவலுடன் வரவேற்பார்கள்.

KHADI WORLD.

கதர்மலரைப் போல ஒரு மாதாந்திர ஆங்கிலப் பத்திரிக்கையை அவசியமென்று கருதப்படுகிறது. நிர்மாணத் திட்டத்தையும், ஸர்வோதய லக்ஷியத்தையும் விளக்கும் அகில இந்தியப் பத்திரிக்கைகள் இப்பொழுது உள்ளதில் 3 முக்கியமானவை. ஹிந்தி “ஸர்வோதய” ஆங்கில ‘ஹரிஜன்’, ‘கிராம உத்யோக’ பத்திரிக்கை. இவைகள் தென்னாட்டில் அதிகமாகப் பரவவில்லை. இந்தப் பத்திரிக்கைகளில் வரும் கட்டுரைகளின் சுருக்கத்தையும் நிர்மாணத் திட்டத்தைப் பற்றிய அகில இந்திய செய்திகளையும் சேர்த்து ஒரு மாதாந்திர பத்திரிக்கை ஆங்கிலத்தில் வெளியிட்டால், இப்பொழுது நகரங்களிலுள்ள படித்தவர்களுக்கும், மாணவர்களுக்கும், தென்னாட்டில்முக்கியமாகத் தமிழ், மலையாளம் கன்னடம், தெலுங்கு முதலிய பிராந்தியங்களில் உபயோகப்படும் எனக் கருதப்படுகிறது. அகிலபாரத சர்க்கா சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையின் கதர்மலர் ஸர்வோதயப் பிரசுராலயம் மூலம் (Khadi World) அல்லது கதர் உலகம் /காதிஜகத்/ என்ற பெயரில் மாதாந்திர பத்திரிக்கை வெளியிட சங்கத்தின் டிரஸ்டிகள் அனுமதித்திருக்கிறார்கள். ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதி கிடைத்திருக்கிறது. வருஷ சந்தா ரூபாய் 3/- தனிப்பிரதி விலை அணா 4. இதை விரைவில் ஆரம்பிக்க கடவுள் அருள்புரிவாராக!

கதாயி (நூற்பு) கார்யகர்த்தா பரீட்சையில் தேறியவர்கள்

தமிழ்நாட்டு சர்க்கா சங்க வீரபாண்டி வித்யாலயத்திலிருந்து சென்ற வருஷம் எப்ரல் மாதம் சேவாகிராம் போன மாணவர்களில் சிலர் அங்கு ‘கதாயி கார்யகர்த்தா’ வகுப்பில் பயிற்சி பெற்று பரீட்சையில் தேறியிருக்கிறார்கள்:–

(1) ஸ்ரீ மாணிக்கவாசகம்
(2) „ டி. வி. தண்டபாணி

(3) ஸ்ரீ ரா. க. பெருமாள்
(4) „ எஸ். கணேசன்
(5) „ என். வி. ராமமூர்த்தி
(6) „ ஆர். சேஷன்
(7) „ எம். எஸ். ராமசாமி
(8) „ நா. நடேசன்
(9) „ மரு. பழனிசாமி

ஸர்வோதய [டிசம்பர்] 1950.

தமிழ்நாட்டு விபாகங்கள்.

சென்ற கதர்மலரில் குறிப்பிட்ட விபாகங்களைப் பற்றி சர்க்கா சங்கத்தின் டிரஸ்டிகள் சில மாறுதலுடன் தீர்மானம் செய்திருப்பதாக சமீபத்தில் அறிந்தோம். டிரஸ்டிகளின் தீர்மானப்படி தென் ஆற்காடு – வட ஆற்காடு விபாகம் ஏற்படாது. இரண்டு ஜில்லாக்களும் கோவை ஜில்லாவுடன் முன்போல வேலை செய்துவரும். திருச்சி ஜில்லா தனி விபாகமாகயில்லாமல் தஞ்சை விபாகத்துடன் வேலை செய்துவரும்.

தமிழ் நாட்டில் விபாகங்கள் என்ற சிறு பிரசுரம் அச்சான பிறகு டிரஸ்டிகளின் அசல் தீர்மானம் கிடைத்ததால் இதை அதில் குறிப்பிட முடியவில்லை.

உபகரண மகாநாட்டின் பிரதிநிதிகள்.

காரியாலயத்திலிருந்து கிடைத்த பெயர்களை சென்ற கதர்மலரில் பிரசுரித்தோம். விஜயம் செய்த அநேகரின் பெயர் காரியாலயத்தில் பதியப்படவில்லை என்று பின்னர் தெரியவந்தது. இக்காரணத்தினால் விஜயம் செய்த சில பிரதிநிதிகளின் பெயர்கள் கதர் மலரில் பிரசுரிக்க விட்டுப் போனதிற்கு வருந்துகிறோம்.

கதாயி மண்டல் பத்திரிகா.

'காதி ஜகத்' என்ற அகிலபாரத சர்க்கா சங்கத்தின் ஹிந்திப் பத்திரிக்கையை ஸர்வோதயத்துடன் இணைத்த பிறகு சர்க்கா சங்கத்திற்கென்று வேறு ஹிந்திப் பத்திரிகை ஒன்றும் இல்லை. தேசத்தில் சென்ற 2 வருஷங்களாக கதாயி மண்டல் இயக்கம் வளர்ந்து வருகிறது. அவைகளைப்பற்றி பல பிரச்னைகள் எழுகின்றன. கதாயி மண்டல்களுக்குள்ளும் சர்க்கா சங்கத்திற்கும் நேரான தொடர்பை ஏற்படுத்துவது அவசியமாகியிருக்கிறது. இதற்காக 'கதாயி மண்டல்' என்ற ஒரு ஹிந்தி பத்திரிகை ஜனவரி 10௳ ஆரம்பிக்கப்பட்டது. சேவா கிராமத்திலிருந்து பிரதி மாதம் 10-வயும் 25-வயும் 2 முறை வெளிவரும். கதாயி மண்டல்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். மற்றவர்களுக்கு வருஷ சந்தா ரூ 1–8–0. ஹிந்தி தெரியாவிட்டாலும் பக்கத்திலுள்ளவரின் உதவியைக் கொண்டு அதிலுள்ள விஷயத்தை தெரிந்து கொள்ள கதாயி மண்டல்கள் முயற்சி செய்யவேண்டும். இந்தப் பத்திரிக்கையில் உள்ள சில முக்கியமான விஷயங்களின் சாரம் அடுத்த கதர் மலரிலோ, அல்லது தனி பிரசுரமாகவோ வெளிவரும்.

கதர்மலர்

சென்ற ஜனவரி பிப்ரவரி 2 மாதங்களுக்கும் சேர்த்து ஜனவரி 5-௳ வெளியிட்டோம். கைக்காகிதம் உபயோகப்படுத்துவதால் பக்கத்தை அதிகரிக்கமுடியவில்லை. மாதம் 32 பக்கத்திற்கு மேல் போனால் இப்பொழுதுள்ள நஷ்டம் அதிகரிக்கும். இந்தக் குறைவான பக்கங்களில் நாங்கள் விரும்பும் அளவுக்கு அதிகமாக விஷயங்களை சேர்க்க முடியவில்லை. கருத்துக்களையும் சிந்தனையும் தாண்டி நிர்மாண வேலைக்கு பயன்படக் கூடியதை மட்டும் பிரசுரிக்கிறோம். எங்களுக்கு கிடைக்கும் செய்தி அறிக்கை எல்லாவற்றையும் பிரசுரிக்க முடியாமைக்கு மிக வருந்துகிறோம்.

Edited and Published by N. Ramaswami for All India Spinners Association (Tamil Nad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

கதாயி மண்டல்.

கேள்வி - பதில்.

ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு.

கதாயி மண்டல் மகாநாடுகளில் அவ்வப்பொழுது கேட்கப்படும் கேள்விகளும், அவைகள் சம்பந்தமான பதில்களும் மற்ற கதாயி மண்டல்களுக்கும் உபயோகமாக இருக்கும். இம்மாதிரி கேள்விகள் பல கதாயி மண்டல் அங்கத்தினர்களுக்கும் அடிக்கடி எழுகின்றன. ஆகையால் கீழே சில கேள்விகளுக்கு பதில் அளிக்கிறோம்.

கேள்வி:- கதாயி மண்டல் அங்கத்தினர்கள் காங்கிரஸில் அங்கத்தினராகலாமா? இன்று கதாயி மண்டலின் நோக்கத்திற்கும், காங்கிரஸின் நோக்கத்திற்கும், சுயதேவைப்பூர்த்தியின் தத்துவத்திற்கும் எல்லையில் வித்யாசம் தெரிகிறது.

பதில்:- வித்தியாசமாக தோன்றினாலும் அதிகமாக சம்பந்தம் இருக்கிறது. சில காங்கிரஸ்காரர்களின் சிந்தனைகளுக்கும் செய்கைகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் விதிகளில் அவ்வளவு வித்யாசம் இல்லை. மற்ற எந்த ஸ்தாபனத்தையும் விட காங்கிரஸ் நமது தத்துவங்களுக்கு மிகவும் ஒத்திருக்கிறது. ஆகையால் கதாயி மண்டல் அங்கத்தினர்கள் காங்கிரஸில் அங்கத்தினராக சேருவதில் ஆட்சேபணையில்லை. அதில் நிர்வாக பதவிகளுக்கு நிற்பது வேறு விஷயம். ஏனெனில் அதில் கோஷ்டிப் பிரிவுகள் ஏற்படாமல் இருக்கமுடியாது. கோஷ்டிகள் ஏற்படுவதால் ஒரு கோஷ்டி நமக்கு விரோதமாகலாம். இதைத்தவிர, கோஷ்டிகளுக்கு நியாயம் (நீதி) வழங்குவது மிகவும் கடினம். நாம் நீதிவழியிலிருந்து விலகுவோமானால் சத்தியம் - அஹிம்சையின் அஸ்திவாரம் குலைந்து விடுகிறது. அத்துடன் அதிகார ஆசையும் பதவிப்பித்தும் ஏற்படும் என்ற பயம் வேறு இருக்கிறது.

கேள்வி 2:- கதாயி மண்டல் அங்கத்தினர்கள் தேர்தலுக்கு நிற்கலாமா?

பதில்:- எவராவது தேர்தலுக்கு நிற்க விரும்பினால், கதாயி மண்டல் விதிகளின்படி அவருக்கு எவ்வித தடையும் செய்யமுடியாது. ஆனால் முன் கேள்வியின் பதிலில் சொன்ன விஷயங்களை நன்றாக கவனத்தில் வைக்கவேண்டும்.

கேள்வி 3:- தேர்தலுக்கு நிற்கவும், அதற்காக பிரசாரம் செய்யவும் கதாயி மண்டலுக்கு திட்டம் இருக்கிறதா?

பதில்:- தனிப்பட்ட ஸ்தாபனம் என்ற முறையில் கதாயி மண்டல்களுக்கு இம்மாதிரி திட்டம் ஒன்றும் இருக்கமுடியாது. கதாயி மண்டல் நிர்மாண வேலை செய்யும் ஒரு ஸ்தாபனமாகும். தேர்தல் சம்பந்தமான தகராறுகளுக்கு செல்வதால் அந்தவேலையில் தடை ஏற்படும். கதாயி மண்டலின் அங்கத்தினர்கள் தங்கள் வோட்டை தங்கள் விருப்பப்படி யோக்கியமுள்ளவருக்கு கொடுக்கலாம்.

கேள்வி 4:- தேர்தலுக்கு நிற்கும் காங்கிரஸ் பிரதிநிதி கதர் உடுத்தாதவராகவும், ஆனால் அவருக்கு போட்டியாக நிற்கும் பிரதிநிதி கதர் உடுத்துபவராகவுமிருந்தால் கதாயி மண்டல் அங்கத்தினர் யாருக்கு வோட் செய்யவேண்டும்?

பதில்:- இருவரில் எவர் யோக்கியராக தென்படுகிறாரோ, அவருக்கு வோட் செய்யலாம். இவர்கள் இருவரில் அதிக யோக்கியதையுடையவருக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டும் என்று நான் கூறுவேன். இதில் கதர் அணிவதை மட்டும் நாம் கருதக்கூடாது. அவருடைய குணத்தையும் சேவா மனப்பான்மையையும் நாம் மதிப்பிட வேண்டும்.

(கதாயி மண்டல் பத்திரிகா—ஜன 10-உ)

கதாயி மண்டல்.

கேள்வி பதில்.

கேள்வி 7 :- கதாயி மண்டல் அமைப்புதில் சர்க்கா சங்கத்தின் நோக்கம் பரவல் முறை என்று சொல்கிறீர்கள். அப்படியானல் நகரங்களில் கதாயி மண்டல்கள் எதற்கு ?

பதில் :- கேள்வியின் முதல் பாகத்தின் பொருள் விளங்குவது கடினம். எந்தவஸ்து முதலில் குவியலாக இருக்கிறதோ, அதைப் பரவலாக்கச்செய்யும் விஷயம் தனி. ஆனல் கதாயி மண்டல்கள் ஆங்காங்கு பரவல் முறையிலேயே அமைக்கப்படுகின்றன. அவைகளை எந்த மத்திய ஸ்தாபனமும் (சென்டரும்) கட்டுப்படுத்த முடியாது. ஒரு சில சிறிய அடிப்படை விதிகள் மட்டும் இருக்கும். கதாயிமண்டலின் வழிகாட்டியாக மட்டும் சர்க்கா சங்கம் இருந்துவருகிறது. கதாயிமண்டலின் நோக்கம் நிர்மாண சேவை. கிராமத்தில் சேவை செய்யவேண்டி யிருப்பதைப்போலவே, நகரத்திலும் சேவை செய்ய வேண்டியிருக்கிறது. நகரத்தில் செய்யவேண்டிய சேவை வேறுமாதிரியாக இருக்கலாம். நகரத்தில் ஒவ்வொருதெருவிலும் தனித்தனி கதாயிமண்டல்கள் இருக்கலாம். அவசியம் ஒவ்வொரு தெருவிலும் இருக்கவும் வேண்டும்.

கேள்வி 8:- அரசியல் நோக்கத்துடன் பல கதாயிமண்டல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கதாயிமண்டலுக்கும், அரசியலுக்கும் என்ன சம்பந்தம் இருக்கும்?

பதில்:- சில கதாயிமண்டல் அங்கத்தினர்கள் கதாயிமண்டலில் சேருவதினல் தேர்தல் சம்பந்தமாகவோ, அல்லது எதாவது சர்க்கார் பதவிகள் கிடைக்குமென்றோ அல்லது அரசாங்கத்திடமிருந்து சிறிது லாபம் கிடைக்குமென்றோ ஆசைப் படுகிறார்கள். இப்படியிருந்தால் அது வருந்தத்தக்க விஷயம். இந்த நோக்குடன் ஒருவரும் கதாயிமண்டலில் அங்கத்தினராக சேரவேண்டியதில்லை. எல்லா அங்கத்தினர்களும் கதாயிமண்டலை தன்னலமற்ற சேவையின் ஒரு கருவியாகவே கருதவேண்டும்.

(கதாயி மண்டல் பத்திரிகா. 3 பிப்ரவரி. 10.)

காந்திஜி நினைவு நிதி.

மஹாத்மா காந்தி நினைவு நிதியை காந்தி ஸ்மாரக் நிதி என்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இதில் 27 டிரஸ்டிகள் இருக்கிறார்கள். டிரஸ்டிகளைத் தவிர நிர்வாக கமிட்டியும் உண்டு. ஒவ்வொரு மாகாணத்திற்கும் நிர்வாகி அல்லது சஞ்சாலக் உண்டு. அவருடன் கூட ஒரு ஆலோசனை கமிட்டி இருக்கும். ஆலோசனை கமிட்டியில் அகில இந்திய நிர்மாண ஸ்தாபனத்தின் மாகாண பிரதிநிதிகளும், மற்றவர்களும் இருப்பார்கள். தமிழ் நாட்டிற்கு ஸ்ரீ N. M. R. சுப்பராமன் அவர்கள் நிர்வாகி (சஞ்சாலக்). ஆலோசனைக்கமிட்டியில் கீழ்கண்ட அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

1. டாக்டர் சௌந்தரம் 2. ஸ்ரீ L. N. கோபாலசாமி, 3. ஸ்ரீ T. S. அவனுசிலிங்கம் செட்டியார், 4. ஸ்ரீ காமராஜ் நாடார், 5. ஸ்ரீ R. வினயகம், 6. ஸ்ரீ சர்தார் வேதரத்னம், 7. ஸ்ரீ R. R. கெய்தான், 8. ஸ்ரீ G. K. தேவராஜுலு, 9. ஸ்ரீ A. P. C. வீரபாகு, 10. ஸ்ரீ O. P. ராமசாமி ரெட்டியார், 11. ஸ்ரீ V. I. முனுசாமிபிள்ளை, 12. ஸ்ரீ நா. ராமஸ்வாமி.

ஆலோசனைக் கமிட்டியின் 3 கூட்டங்கள் நடந்தன. 3-வது கூட்டம் பிப்ரவரி 4, 5, 6 தேதிகளில் சென்னையில் நடந்தது. தமிழ் நாட்டில் சில நிர்மாண வேலை திட்டங்கள் சிபாரிசு செய்யப்பட்டன. இந்த திட்டங்களுக்கு டிரஸ்டிகளின் அனுமதி கிடைத்தால் சுமார் ஒரு லக்ஷரூபாய் வரையிலும் நிர்மாண வேலைக்கு இவ்வருஷம் தமிழ் நாட்டில் செலவு செய்யப்படும்.

காலா பிரஸ், திருப்பூர்.